# திராவிடன்

R.T.ARASU

ஆசிரியர்: என்.வி.நடராசன்




தி.மு.க. 3வது பொதுமாநாடு (சிறப்பிதழ்) விலை: 25 காசு

# திருப்பரங்குன்றம்; திருவிடத்தின் தனிப்பெரு மன்றம்!

**என்.வி.என்.சோமு**

திருப்பரங்குன்றம்!

—தென்னக அரசியல் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றுவிட்ட திரு நகரம்!

அடிமைச் சங்கிலியில் பிணையுண்டு கிடக்கும் திராவிடர்கள் அண்ணாவின் தலைமையில் அணிவகுக்கும் அழகு நகரம்!

திராவிடக்கூட்டாட்சியை நிறுவ இலட்சியக் கனவு கொண்டிருக்கும் எண்ணற்ற இளைஞர் கூட்டம் அணிவகுக்கும் மாபெரும் பாசறை!

திருப்பரங்குன்றம்- திருவிடத்தின் விடுதலைக்குப் பரணி பாடும் தனிப்பெரு மன்றம்!

இத்தனை நாள் அந்த ஊர் தென்னகத்தின் வரலாற்றில் மிகச்சாதாரணமான ஒரு இடமாக இருந்து வந்தது!

இன்று வரலாற்றுப் புத்தகத்தின் புகழ் மணக்கும் பக்கங்களில் அதனுடைய பெயர் பளிச்செனப் பிரகாசிக்கப்போகிறது

திருப்பரங்குன்றம் — இத்திங்கள் 13, 14, 15, 16 நாட்களில் எழிலான நகராகக் காட்சியளிக்கும்!

ஆம்! "அடைந்தே தீருவோம் திராவிட நாட்டை" என்று சூளுரைத்துக் கிளம்பிவிட்ட மறவர் கூட்டம் பரணிபாடத் திரளுகிறது திருப்பரங்குன்றத்தில்!

தென்னகத்தின் மிகப்பெரும் அரசியல் கட்சியான தி. மு. கழகம் நடத்தும் அந்தப் பொதுமாட்டிற்காக, திருப்பரங்குன்றம் எழிலுருவம் பெறுகின்றது!

அரசினரின் ஆதரவு பெற்று, ஆட்சி தம்மிடம் இருக்கிறது என்ற காரணத்தால் எங்கே மாநாடு நடைபெறுகிறதோ அந்த இடத்துக்குப் புதிய ரயில் நிலையம் அமைத்துக் கொண்டும், அரசாங்கத்தின் மின்சாரத்துறை, மராமத்துத்துறை முதலியவற்றின் வசதிகளைப் பயன்படுத்திக்கொண்டும், ஆலை அரசர்களும் மோட்டார் மன்னர்களும், சீமான்களும் சீமாட்டிகளும் அளிக்கின்ற பெருநிதியைக் கொண்டும் எழிலான நகர் அமைத்துக் கொள்கிறதே காங்கிரஸ் கட்சி! — அதைப்போன்ற நகரமல்ல திருப்பரங்குன்றத்தில் தி. மு. க.வினர் அமைக்கும் பாண்டியன் நகர்!

"நீரோடை நிலங்கிழிக்க, நெடுமரங்கள் நிறைந்து பெருங்காடாக்கப் பெருவிலங்கு நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின் நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக்கூட்டம் போராடும் பாழ் நிலத்தைப் பதுக்கி" இன்றைக்குப் புது நகரம் உண்டாக்கியிருக்கின்றூர்கள் அண்ணாவின் அருமைத் தம்பியர்!

**வெட்டிவா என்றால் கட்டிவரக் கூடிய ஆற்றல் படையினர்தான் அண்ணாவின் தம்பியர் என்பதை நாடு நன்கறியும்!**

கரடுமுரடாக இருந்த நிலத்தைச் செம்மைப்படுத்தி அழகு கொழிக்கும் மாமன்றமாக அதை மாற்ற இரவும் பகலும் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் பாடு பட்டுள்ளார்கள்—வரவேற்புக்குழுத் தலைவர் மதுரை முத்து அவர்கள் தலைமையில்!

1956-ல் திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டில் பந்தலை நிர்மாணிக்கச் சென்றிருந்தபோது அங்கே தலைதூக்கிய விஷப்பூச்சிகள் ஏராளம்! ஏராளம்!

ஆனால் தம்பியரின் உழைப்புக் பின்னர்—வரவேற்புக் குழுத் தலைவராக இருந்த அம்பில் தர்மலிங்கம் அவர்களின் அயராத முயற்சிக்குப் பின்னர் அங்கே வள்ளுவர் நகர் வனப்புடன் அமைந்தது!

இதைக் குறிப்பிட்டுப் பேசிய அறிஞர் அண்ணா அவர்கள், "தம்பி, இத்தனை எழிலான மன்றத்தை இங்கே உன்னால் எப்படி அமைக்க முடிந்தது? அதைப் போன்றுதான் எத்தகைய கடினமான காரியமாக இருந்தாலும் செய்து முடிக்கும் ஆற்றலை நீ பெற்றிருக்கிறாய். இது உன்னால் முடியாவிட்டால் வேறுயாரால் முடியப்போகிறது, நீ இதைக் கூடச் செய்யாவிட்டால் வேறு எதைத்தான் செய்யப்போகிறாய்?" என்று உரிமையோடும் உணர்ச்சியோடும் கேட்டார்.

அந்த மாநாடு நடைபெற்று முடிந்து சரியாக ஐந்தாண்டுகளுக்குப் பிறகு இந்த மாநாடு நடைபெறுகிறது!

திருச்சியில் கூடிய நாம் திருப்பரங்குன்றத்திலே கூடுகிறோம்!

திருச்சி தந்த தீர்ப்புதான் நம்முடைய தேர்தல் ஈடுபாடு! அதன் விளைவாகத்தான் திராவிட நாட்டு விடுதலையை ஆதரித்து 17 இலட்சம் வாக்காளர்கள் வாக்களித்திருப்பது!

1951-ம் ஆண்டில் சென்னையில் நமது முதல் மாநில மாநாடு நடைபெற்றது. ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கூடி இருந்தனர்!

1956-ம் ஆண்டில் திருச்சியில் நமது இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்றது — மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர்.

**1961-ம் ஆண்டு—இப்போது திருப்பரங்குன்றத்தில் நமதுபாசறை அணிவகுக்கிறது — குறைந்தது ஐந்து இலட்சம் மக்களாவது கூட வேண்டுமென்று பூரிப்புடன் சொல்கிறார் மாநாட்டுப் பொருளாளருமான கலைஞர். கருணாநிதி அவர்கள்!**

1951ம் ஆண்டு சென்னையிலே கூடினோம்—தேர்தலில் நம் நிலையென்ன என்று விவாதித்தோம். திராவிட நாட்டின் விடுதலைக்காகப் பணியாற்றுவேன் என்று கையொப்பம் இடுபவர்களையே நாம் ஆதரிப்பது என்று முடிவு செய்து அப்படியே பலரை ஆதரித்தோம். சிறப்புமிகு வெற்றிகளைப் பெற்றோம். குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சின்னமாக இருக்கும் ராம்நாத் கோயங்காவை திண்டிவனம் மக்கள் சபைத் தொகுதியில்—திராவிட நாட்டு விடுதலைக்குப் பணியாற்றுவேன் என்று ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட திருக்குறள் முனுசாமியைக் கொண்டு தோற்கடித்தோம்! இதைப்போல் பல சிறப்பான வெற்றிகளைப் பெற்றோம்; ஆனால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஒரு சிலர் ஆட்சி பீடத்தினரிடம் மயங்கிப்போய் நமக்குத் துரோகமிழைக்கத் துணிந்துவிட்டனர்.

ஆகவே 1957—ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றமாநில மாநாட்டில் மக்களின் விருப்பப் படி நாமேதேர்தலில் ஈடுபடுவது என்று ஜனநாயகமுறைப்படி பொது வாக்கெடுப்பு நடத்தி முடிவு செய்தோம்

அதன்படி சட்டமன்றத்திலும்—பாராளுமன்றத்திலும், நகராட்சி மன்றங்களிலும் ஊராட்சி மன்றங்களிலும் நமது குரல் ஒலித்துக் கொண்டு வருகின்றது.

இப்போது திருப்பரங்குன்றத்தில் கூடுகின்ற நமது பாசறை எதிர்காலத்தில் நமது கழகம் பெற வேண்டிய மாபெரும் வெற்றிகளுக்கு வழிகோல வேண்டும்.

1951ல் சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டுக்கு அண்ணா அவர்கள் தலைமை வகித்தார்கள்.

1956ம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டுக்கு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

இப்போது திருப்பரங்குன்றம் மாநாட்டுக்கு அண்ணா அவர்கள் தலைமை ஏற்பது நமக்கெல்லாம் கிடைத்திருக்கும் ஒரு நல் வாய்ப்பாகும். 1951க்கும் 61க்கும் இடைப்பட்ட இந்தப் பத்தாண்டு காலத்திற்குப் பிறகு அண்ணா அவர்கள் தலைமை ஏற்பது திருப்பரங்குன்றம் மாநாட்டின் சிறப்புக்கு மகுடம் அமைப்பது போன்றாகும்.

**திராவிட நாட்டின் விடுதலைக்காக அயராது பணியாற்றி வரும் தி. மு. கழகத்துக்கு இப்போது பணிகள் மிகவும் அதிகமாகிக் கொண்டே வருகின்றது.**

துரோகமிழைப்போரின் பட்டியல் தொடர்ந்தவண்ணமுள்ளது. தேசியத்தாரின் மாயைகளில் நம்மிடமிருந்தே ஒருசிலர் சிக்கிக்கொண்டு நாட்டு விடுதலையை நையாண்டி செய்து வருகின்றனர். ஆனால் அதே நேரத்தில் நாட்டு விடுதலையில் மக்களுக்கு இருக்கும் அசையாத நம்பிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே யொழிய குறையவில்லை. திராவிட மக்களின் இன எழுச்சியையும் அவர்களின் பழம் பெருமையையும் ஒப்புக் கொண்டு,

எச். ஜி. வெல்ஸ்
ரொமேஷ் சந்திரடட்
ராதாகிருஷ்ண முகர்ஜி
பண்டித நேரு
எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
பி. டி. சினுவாச அய்யங்கார்
கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி
மறைமலை அடிகள்
சோமசுந்தர பாரதியார்
ப. வெ. மாணிக்கம் பிள்ளை
பேராசிரியர் சுந்தரம் பிள்ளை
திரு. வி. க.
சி. ஜே. வர்க்கி
ஜோசப் முண்டசேரி
பி. வி. ராசமன்னர்

—ஆகியோர் பல உண்மைகளை விளக்கியுள்ளனர்.

இத்தனை பேருடைய சொற்களும் திராவிடத்தின் தனிச் சிறப்புக்குச் சான்று கூறி நிற்கும்போது இவைகளை எதிர்த்து

காமராசர்
கக்கன்
பக்தவத்சலம்
சுப்ரமண்யம்
சிவஞானம்
சம்பத்

ஆகியோர் கனவு என்றும், கற்பனை என்றும் கூறிவருகின்றனர்.

அத்தகைய குழப்ப நெஞ்சம் படைத்தோரை குன்றத்தில் கூடும் கொள்கை மறவர்களை வந்து காணுமாறு அழைக்கிறோம்.

அங்கே அண்ணா தீட்டும் வீரகாவியத்தையும்—முன்னணி வீரர்களின் இன எழுச்சி மிக்க சொற்பொழிவுகளையும் கேட்டுத் தெளிவடைய வேண்டுகிறோம்.

திருப்பரங்குன்றத்தில் கூடும் நம்முடைய மாநாடு—திருவிடத்தின் விலங்கொடிக்கக்கூடும் பாடி வீடு!

**குன்றத்தில் கூடும் கொள்கை மறவர்களே! நமது மூல முழக்கத்தை முன்னைவிடக் குன்றுமல் குறையாமல் முழக்குவோம்!**

**வாழ்க திராவிடம்!**

**வளர்க தி. மு. கழகம்!**

# எழிலார் குன்றில் இசைவளர் அண்ணா!

மயில்போன்ற நங்கையர்கள் நடந்த தாலே
மயக்கிடவே நெளிகின்ற இடையைப் போல
ஒயிலாக நடக்கின்ற வையை யாற்றின்
உயர்கரையின் பெருநகராம் மதுரைக் கண்ணே
எயிலாக அமைந்துள்ள எழிலார் குன்றில்
ஏறன்ன நடைபோட்டுத் திராவி டத்தார்
அயில்போன்ற தங்கொள்கை அகத்தே ஏந்தி
ஆர்வமுடன் செல்கின்றார் கடலே போல

கடலெனவே சென்றிடுதல்; கழக வீரர்
களித்திட்டு வருதற்கோ அல்ல, நாளை
அடலெனவே ஆர்ப்பரித்து நாட்டைக் காக்க
ஆருயிரைத் தருவதற்கே வீரர் கூட்டம்
கடமையினைக் கண்ணியத்தின் துணையி னாலே
கட்டுப்பா டோடாற்ற அண்ணா கூறும்
புடமிட்ட தங்கநிகர் கருத்தைக் கேட்கப்
புறப்பட்டார் பொலிவுவளர் குன்றம் நோக்கி.

தென்னகமே திரண்டிங்கு வந்த தென்றால்
தேசியத்தார் கண்மூடி இல்லை என்பார்
தன்னகமே வெற்றாகிப் போன தாலே
தலையாட மயக்குற்றுத் தளர்ந்து வீழ்வார்
அன்னவரைக் குறித்திங்குப் பேசு தற்கே
அவகாசம் நமக்கில்லை; ஆங்கே அண்ணா
பொன்னனைய கருத்தினையே பொழிந்து தள்ளப்
புகுவேளை, பொன்வேளை செல்வோம் வாரீர்!

பந்தலென நாமிதனைப் பகரல் ஆமோ?
பசுமைநிகர் நகரொன்றை அமைந்தார் நன்றே!
சந்ததமுந் தமிழுக்கே உழைத்த மன்னர்
சரித்திரத்தை நினைவூட்டும் எழிலார் வீடே!
எந்தவிதம் இதனெழிலை இயம்பும் என்நா
எடுத்துரைக்கத் தமிழிலும்ஓர் வார்த்தை இல்லை
யந்திரம்போல் உழைத்திட்டே அமைத்தார் போலும்
இல்லையெனில் இவ்வெழிலைப் பெறுதற் காமோ!

எழிற்பந்தல் மணிமகுடம் போல ஆங்கே
எடுப்பாக அமைந்ததுதான் மேடை என்பார்
பழிக்கின்ற மாற்றாரைப் பணியச் செய்யும்
பாங்கான அரசிருக்கை என்பேன் யானே!
விழித்திருக்குஞ் சிங்கங்கள் ஒன்றாய்க் கூடி
விடுதலைக்கு வழிவகையை ஆய்கின்றார்கள்
அழிக்கின்றே னென்றவர்கள் அஞ்சி யோடி
அணைக்கின்ற அண்ணாமுன் இல்லா ரானார்!

கத்துகடல் சூழ்நாட்டின் அறிஞர் போற்றும்
கனிவிதயக் குணக்குன்று கண்ணோர் அண்ணா
முத்தமிழில் பேசுதற்குப் புதுமை கண்டோன்
முழுநிலவாய்த் திராவிடத்தின் நலிவைப் போக்க
நித்தமுமே உழைக்கின்ற நிலைமை கொண்டோன்
நித்திலத்தின் மேன்மையினை எழுத்திற் காட்டும்
மூத்தவனின் தலைமையிலே கூட்டம் என்றால்
மொழியாலே புகழ்ச்சிசெய முடியா தென்னல்



தங்கத்தைக் குணத்தினிலே கொண்டோர், யானைத்
தந்தத்தின் வண்ணத்தைச் செயலில் கொண்டோர்
சிங்கத்தைப் போல்வீரம் கொண்டா ரேனும்
சிந்தையினை மறநெறியிற் செலுத்தா ரென்றும்
அங்கத்தைப் பலகூறாய் ஆக்கும் போழ்தும்
அன்னைதிரு நாட்டிற்குத் துரோகஞ் செய்யார்
திங்கள்தரும் இன்பத்தைப் பேச்சில் தந்தே
திராவிடத்தைக் காக்கஅற நெறியிற் செல்வார்

அழலெனவே உரைப்பாரை அடக்கி மாற்றார்
அன்பினையும் பெறவல்ல அறிவு மன்னர்
பழச்சுவையைப் பேச்சினிலே கலந்த ளிப்பார்
பண்பினிலே பைந்தமிழின் தன்மைக் கொப்பார்
கிழவர்முதல் மழலையருந் அண்ணா என்றே
கிளர்ந்தோங்கும் அன்பாலே அழைக்கப் பெற்றோர்
கழகத்துக் காளையரின் உயிர்போன் றாரைக்
கவின்மணக்கும் எழிற்குன்றில் காண்போம் வாரீர்!

முத்தெழிலன்

14-ம் பக்கத் தொடர்ச்சி.........

நம்ப வைத்து மோசம் பண்ணிட்டானே. திருட்டுக் கழுதைக்கு நாணயம் எங்கே தெரியப் போவுது. கட்டேல போகவேண்டிய காலத்திலே காப்பு மாட்டிக்கிட்டுப் போகப் போறேனே. எனக்கு மட்டுமில்லே இந்தத் திருட்டுப் பசங்களை நம்பி யாராரிருக்காங்களோ அவங்களுக்கெல்லாம் கடைசியிலே இந்த முடிவுதான்.

(கிழவி முன்னே நடக்க போலிசார் பின் தொடர்ந்து சர்வ ஜாக்கிரதையோடு செல்கின்றனர்)

## காட்சி 46

இடம்: தனபாலன் வீடு, தனி அறை.

நேரம்: 1—4-மணி.

இருப்போர்: தனபாலன், சரசா.

நிலைமை: (கொள்ளையிடப்பட்டு வந்த அணி மணிகளைப் பூட்டி அழகு பார்ப்பதும், எடுத்துக் கீழே வைப்பதுமாகப் பொழுதைத்தேய்த்துக் கொண்டிருக்கிறாள் சரசா. உள்ளே நுழைந்த திருட்டுத் தலைவன் தனபாலன்...)

தன: பூட்டிய நகைகள் ஈட்டியைப் பாய்ச்சுகின்றனவே எனது நெஞ்சத்திலே.

சர: இத்தனையும் எனக்குத்தானா?

தன: அத்தனையும் உனக்கே தான்! நானே உனக்காகிவிட்ட போது இந்த அணிமணியும் எந்த மட்டோ!

சர: ஆமாம் சுவாமி. வண்டின் விருப்பம் மலருக்குத் தெரியாமல் போய்விடுமாயென்ன. மஞ்சத்தை நெஞ்சத்தில் விரித்திருக்கும் அந்த பாக்கியம் ஒன்றே போதுமே.

தன: நீ மட்டுமென்ன......அந்த பாக்கியத்தை எனக்குந்தானே பங்கிட்டளித்திருக்கிறாய். தன்னந்தனியாக நான் பறந்துவிடாமல் செல்லுமிடமெல்லாம், சிறகடித்து ஜோடி சேர்ந்து இணைந்து வருகிறாயே......இது போதாதா இன்பம் என் வாழ்வில் நிலைத்திருக்க. புயல்காற்றும் பூகம்பமும் என்னைச் சுற்றியிருக்கும் நேரத்திலே உனது புன்னகை ஒன்று போதுமே!.........நீட்டிடும் துப்பாக்கிகளை நினைத்துக் கூட நான் பயந்ததில்லையே, வாட்டிடும் உன் விழிகளைக் கண்டுதானே நடுநடுங்கியிருக்கிறேன்.

பர: சுவாமிக்கு என் மீது அவ்வளவு நடுக்கமா?

தன: என்னை கண்டிக்கக்கூடியவள், தண்டிக்கக்கூடியவள் நீதானே. உன்னிடம்தானே அச்சம்.

(வெளியிலிருந்து பிறரால் குடிகாரக் கவிஞனென்று சொல்லப்பட்ட திருடன்...பலமாகப் பாடுகிறான்.)

அச்சம் என்பது மடமையடா...!

(தனபாலனும், அவனது ஆருயிர்க் காதலி சரசாவும் விழுந்து விழுந்து சிரிக்கின்றனர்.)

தன: கோழைப்பயல்! இவன்தான்அச்சத்துக்கு அடிமையாகி விட்டானே இப்போது இவனுக்கேன் அஞ்சாமை பற்றிய பாட்டு.........

[தொடரும்]

# மனமாற்றம் அல்ல - தடுமாற்றம்!

தூத்துக்குடி ஜோசப்

காஞ்சியில் கூடிய கருத்தரங்கு, கழகக் கொள்கைகள் குறித்தே பேசவேண்டுமென்றும், பிரிந்தவர் பற்றி பெரிதுபடுத்த வேண்டாம் என்றும், அவசியம் பேசித்தான் ஆகவேண்டுமென்ற நிலை பிறந்தால் வெற்றிலை, பாக்கு போடும் போது சுண்ணாம்பு உபயோகிப்பதைப் போல் பேசிக்கொள்ளலாம் என்றும் முடிவெடுத்திருக்கிறது. ஆனால் தோழர் சம்பத் சாட்டுகிற குற்றச்சாட்டுகளில் சிலவற்றிற்குப் பதில் சொல்லுவதன் மூலம் கழகக் கொள்கைகளை விளக்குவதற்கான வாய்ப்புக் கிட்டினால் அதை இழந்து விடச் சொல்லவில்லை. ''அந்த முறையில் அரசியல் கருத்துக்கள் நாளுக்கு நாள் மாறுவது இயற்கை. அதேபோல் திராவிட தேசியம் தேவை என்றுதான் கருதினேன். நடவாத காரியம் என்று தெரிந்தபின் தமிழ்த் தேசியம் பேசுகிறேன். அரசியல் என்பது மதம் அல்ல. மத நூல்களில்தான் 2000 வார்த்தை என்றால் அதில் ஒரு எழுத்தைக்கூட மாறக்கூடாதென்று சட்டம் போடுவார்கள். அரசியலில் சூழ்நிலைக்குத் தக்கவாறு கருத்துக்கள் மாற்றப்பட வேண்டும்'' என்று தோழர் சம்பத் சொல்லி வருகிறார்.

சம்பத் 12 ஆண்டு காலமாக சொல்லி வந்தது திராவிட நாடு. அது சாத்தியமில்லை. எல்லா மாநிலங்களிலும் மொழிவழி தேசியமே ஏற்பட்டிருக்கிறது. கன்னடத்தானும், ஆந்திரத்தானும், கேரளத்தானும் கேட்காதபோது அவனுக்கும் சேர்த்து நாம் ஏன் திராவிட நாடு கேட்கவேண்டும்'' என்று இப்போது கூறுகிறார். மற்ற மாநிலத்தவர் கேட்கவில்லை — தமிழர்கள் மட்டும்தான் ஆதரிக்கிறார்கள் என்றால் இவர் என்ன செய்ய வேண்டும் திராவிடநாடு தனி நாடாகப் பிரியவேண்டும் என்று கேட்கலாம். ஆனால் இவர் தமிழ் நாடு தனியாகப் பிரியவேண்டும் என்று கேட்கலாம். ஆனால் இவர் தமிழ் நாடு தனியாகப் பிரியவேண்டும் என்று கேட்கவில்லை—பிரிந்து போகும் உரிமை இருந்தால் போதும் — பிரியவேண்டிய அவசியம் இல்லை என்கிறார். எனவே அவரது மாற்றம் உண்மையிலேயே மாற்றமல்ல—தடுமாற்றம்தான்.

மதம் மாறக்கூடியதல்ல — அரசியல் மாறக்கூடியதுதான் என்கிறார். எனவே நான் மாறிவிட்டேன் என்கிறார். அரசியலிலும் அடிப்படை மாறுவதில்லை—போராட்ட முறை, திட்டங்கள், இலட்சியத்தை அடைவதற்கான வழி முறைகள் இவைகள்தான் மாறுமேயொழிய அடிப்படைக் கொள்கை அந்த இலட்சியத்தை அடைவது வரை மாறுவதில்லை. அதிலும் 12 ஆண்டுகள் என்பது அரசியலில் ஒரு கண் இமைப்பொழுதுதான். 1885ம் ஆண்டு தொடங்கிய காங்கிரசின் இலட்சியம் 1947ல்தான் நிறைவேறியது. இடைப்பட்ட ஆண்டுகள் 62. இந்த 62 ஆண்டுகளில் அவர்களுக்குள்ளே பலத்த கருத்து வேறுபாடுகள் தோன்றின, என்றாலும் அடிப்படை இலட்சியமான சுதந்திர உணர்ச்சி எக்காலத்திலும் மாறாத ஒன்றாகும். கண்ணை மூடிக்கொண்டு மதம் சொன்னதை அப்படியே பின்பற்றுவது போல் அரசியலில் அன்று சொன்னதைச் சொல்லவேண்டுமென்பதில்லை என்கிறார்.

உலகம் தட்டையானது என்ற கருத்துத்தான் ஆரம்பத்திலே இருந்து வந்தது. அது பொய் என்றும் உலகம் உருண்டை என்றும் கலிலியோ சொன்னார். சொன்னது மட்டுமல்ல, அதற்குச் சான்றாக ''மனிதன் ஒரு இடத்திலிருந்து புறப்பட்டால் மறுபடியும் அதே இடத்திற்கு வந்து சேருகிறான் உருண்டையாக இருப்பதால்தான் அப்படி வர முடிகிறது. தட்டையாக இருந்தால் நேராக போய்க் கொண்டேதான் இருப்பான்'' என்றார். ஆனாலும் அதை யாரும் நம்பவில்லை—நம்பவில்லை,என்பது மட்டுமல்ல, கருத்துள்ள அந்த வார்த்தைச் சொன்ன கலிலியோவுக்குக் கல்லடிதான் பரிசாகக்கிட்டியது. ஆனால் அப்புறம் உலகம் அதை ஒப்புக்கொள்ள ஆரம்பித்தது. விஞ்ஞானம் வளர வளர உலகம் உருண்டைகூட அல்ல — கோழி முட்டை வடிவமுள்ளது என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள்.

கல்லை உயரே எறிந்தால் திரும்பக் கீழே விழுந்து விடுகிறது. இது எல்லோருக்கும் தெரியுமே தவிர இது ஏன் என்று எவருக்குமே தெரியாமல் இருந்தது, இந்த நிலையில் நியூட்டன்பூமியின் ஆகர்ஷண சக்தி மேலே உள்ள பொருளை கீழே இழுத்துவிடும் என்று கண்டு பிடித்தார். இது ஒரு கட்டம் இதற்கு அடுத்த கட்டம் என்ன வென்றால் பூமிக்கு ஓரளவுதான் ஆகர்ஷண சக்தி உள்ளது. ரொம்பவும் உயரே ஒரு பொருள் போய் விட்டால் அங்கு சூன்யவெளி இருப்பதால் அப்பொருள் பூமிக்குத் திரும்பாது என்பது.

இந்த அளவுக்கு நாளும் நாளும் கருத்துக்கள் மாறிக்கொண்டுதான் வருகின்றன. ஆனால் இயற்கை என்றுமே மாறுவதில்லை. அன்றும் இன்றும் சூரியன் கிழக்கேதான் உதிக்கிறான். அதேபோல் அன்றும் 5ம் 3ம் எட்டுத்தான். இன்றும் எட்டுதான். கணக்கு மாறுவதில்லை சுதந்திரம் என்பது கணக்கு போன்றது. விடுதலை பெறவேண்டுமென்ற எண்ணம் இன உணர்ச்சி — மொழிப்பற்று இவை எல்லாம் எல்லாக் காலத்திற்கும் பொருந்திவரக்கூடிய அம்சங்களாகும். இவற்றின் அளவு கொஞ்சம் கூடலாம்—குறையலாம். ஆனால் இவைகள் அடங்கியேபோய்விடுமேன்பது அறியாமையாகும்.

அதேபோல்தான் திராவிட இனம் விடுதலை பெறவேண்டுமென்கிற நினைப்பு இயற்கையாக எழ வேண்டிய நினைப்பாகும் ஒரு குறிப்பிட்ட இனத்தார் சேர்ந்து வாழ வேண்டுமென்பது கணக்கைப் போல் மாறாத ஒன்று. அதை மதத்தோடு சேர்த்துப் பிணைப்பது தவறான வாதமாகும்.

சூயஸ் கால்வாய்த் தகராறு நடந்தபோது எகிப்து தனிநாடு— அதன் அதிபர் நாசர், சிரியா தனி நாடு—அதன் அதிபர் குவாட்லி. இவை இரண்டு நாடுகளாக இருந்தாலும் இனம் ஒன்று என்பதால் இரண்டும் ஒன்று சேர்ந்து ஐக்கிய அரபுக் குடியரசு தோன்றி அது முழுமைக்கும் நாசர் அதிபரானார். இனங்கள் பிரிவுபட்டு இருந்தாலும் அவைகள் ஒன்றாகச் சேரும் காலமிது. இந்த நிலையில் திராவிட இனம் முழுமைக்கும் விடுதலை வேண்டுமென்று நாம் கேட்கும்போது இன உணர்ச்சி தேவையில்லை — மொழிவழி தேசியம் மட்டுமே போதும் என்கிறார். அதுகூட மொழிவழியில் நாடு பிரிவதை அவர்ஏற்றுக்கொள்ளவில்லை பிரியும் உரிமை மட்டும் போதும் என்கிறார்.

பிரிவினை தேவையில்லை— தமிழ் நாடு தமிழருக்கே என்ற பிரிவினைதான் தற்போதைய தமிழ்த்தேசியக் கட்சியின் முழக்கமாகும். ஏறத்தாழ இதே கருத்தைக் கொஞ்சம் மாற்றி பல கட்சிகள் இன்று நாட்டில் கூறிக் கொண்டிருக்கின்றன. இதில் ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து தனது கொள்கையை வலியுறுத்துவதைவிட தனிக்கட்சி ஏன் அமைக்கவேண்டும்? ''ஏற்கனவே நாட்டில் கட்சிகள் ஏராளமாயிருக்கிறதே! நீங்கள் வேறு கட்சி ஆரம்பித்து இருக்கிறீர்களே!'' என்று சம்பத்திடம் கேட்டபோது அதற்கவர் சொன்ன பதில் நிரம்பவும் வேடிக்கை நிறைந்தாயிருக்கிறது. பெங்களூரில்கூட அவர் பேசும் போது குறிப்பிட்டார். ''கட்சிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காகத்தான் கட்சி ஆரம்பித்திருக்கிறேன்'' என்று. ஏற்கனவே இருக்கும் கட்சிகளுடன் கூட ஒரு கட்சியை புதிதாக ஆரம்பித்தால் கட்சியின் எண்ணிக்கை கூடுமா? குறையுமா? இது என்ன தத்துவம் என்றே புரியவில்லை — அவருக்குத்தான் வெளிச்சம்.

தனது கட்சிக் கொள்கையை தமிழரசுக் கழகம், நாம் தமிழர் இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய கட்சிகளின் தலைவர்களிடம் விளக்கிப் பேசுவதாகக் குறிப்பிட்டார். கலைஞர்களால் நமது கழகம்கெட்டு விட்டது என்று கர்ஜித்த இவர் கலைக்காவலர் வேணுவின் வீட்டில் ம. பொ. சி. யைச் சந்தித்தார். தன்னை வந்து சந்தித்துவிட்டாரே என்ற மகிழ்ச்சியில் இவரைச் சிறிது நாட்களாகப் புகழ்ந்துகொண்டிருந்த சிவஞானம் தற்போது தனது 'செங்கோல்' ஏட்டில் தாக்கி எழுத ஆரம்பித்துவிட்டார்.

பின்னர் பெரியாரைச் சந்திக்கப் போனார். போய் என்ன பேசினார் தெரியுமா? சிறு பிள்ளைகளை யாராவது அடித்துவிட்டால் உடனே அழுதுகொண்டு போய் தந்தையிடத்திலே சொல்லும். அதே போல்தான் இவர்களது சந்திப்பைப்பற்றி பெரியாரிடம் கேட்ட போது கண்ணீர்த்துளி பசங்கள் என்னைச் செருப்பால் அடிக்கிறார்கள் என்று குற்றம் சாட்டினார் நான் தைரியத்தை இழக்காமல் இரு என்று சொல்லியிருக்கிறேன்'' என்றார். இதுதான் பெரியாரைச் சந்தித்ததின் இரகசியம்!

கழகம் வன்முறையைக் கண்டிக்கிறது. சம்பத் மீது யார் செருப்பை வீசினாலும் அது மிக தவறான செயல்தான். ஆனால் அதை மூட்டைக்கட்டிக் கொண்டுபோய் சிறு பிள்ளைகள், தந்தையிடம் சொல்லி அழுவதுபோல் பெரியாரிடம்போய் 'ரிப்போர்ட்' செய்திருக்க வேண்டாம்.

எனவேதனது கட்சியின் கொள்கை மற்ற கட்சித் தலைவர்களிடம் சொல்லும் முயற்சியிலும் தோல்வி கண்டுவிட்டார். இனி என்னதான் செய்யப் போகிறாரோ! — பொறுத்திருந்து பார்ப்போம்.

எனவே இவரது மாற்றம் அவர் எதிர்பாராத எந்தப் பலனையும் தரவில்லை—பிறகு ஏன்தான் மாறினாரோ தெரியவில்லை. திருச்சியில் செருப்பு வீச்சு ஏற்பட்டதே அந்தக் கூட்டத்தில் இவரே பேசினார்:- ''12 ஆண்டு காலமாக இயக்கம் நடத்திவிட்டு ஓடினால் பாதி இராத்திரியிலே அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடுகிறேன் என்றுதான் அர்த்தம்'' என்பதாக, இது இவரது கட்சி ஏடு, என்று தன்னை இன்றைய தினம் சொல்லிக் கொள்ளும் 'இனமுழக்கம்' ஏட்டில் வந்தது. அப்படியானால் இவர் பாதி இராத்திரியிலே அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடித்தான் கட்சி ஆரம்பித்தாரா?

12 ஆண்டு காலமாக சொல்லி வந்த கருத்து இப்போதைய சூழ்நிலைக்கு ஒத்து வரவில்லை என்பதற்காக அதை மாற்றுகிற சம்பத் இதே கருத்து இன்னும் 12ஆண்டு காலத்திற்குத் தாக்குப்பிடிக்கும் என்று எதைக் கொண்டு முடிவு செய்கிறார் என்பதை விளக்கியாக வேண்டும். இன்னும் 12 ஆண்டு கழித்து அப்போதைய சூழ்நிலைக்கு இது ஏற்றதல்ல என்று இப்போது சொல்லுகின்ற கருத்தையும் மாறக்கூடும் — அப்போதும் மதம் போன்றதல்ல அரசியல்—மாறக்கூடியது என்று சொல்லக்கூடும்.

இப்படி இவர் சொல்லிக் கொண்டே போகவும் அதைச் சரிதான் என்று ஆமாஞ் சாமி போட்டுக்கொண்டே போகவும் முட்டாள்களால்தான் முடியும்— நம்மால் முடியாது. பெரியாரும் நாளுக்கொரு பேச்சுப் பேசுவார்— அதை அப்படியே பின்பற்றிக் கொண்டு போகவேண்டும் என்பார். அதனால்தான் என்னைப்பின் பற்ற முட்டாள்கள் தேவை என்றார். தந்தை வழியிலேயே தனையனும் நாளுக்கொரு பேச்சுப் பேசுகிறார். முன்பு காட்டிய வழி தவறு என்று புதுவழி காட்டுகிறார். இவ்வழியும் தவறு என்று நாளை வேறு வழி காட்டுவார். இப்படி ஏழு வழியில் இழுத்துச் செல்லும் இவர் வழி நல் வழி என்று நம்பாமல் நம் வழி செல்வதே—அண்ணா காட்டிய அறவழி செல்வதே நமது நோக்கமாகும். அந்த ஒரே வழி தான் திராவிடநாடு திராவிடருக்கே என்பது. இதை மறுக்கும் சம்பத்திற்கு உண்மையிலேயே மனமாற்றம் அல்ல — தடுமாற்றம் தான் ஏற்பட்டிருக்கிறது.

# ஒரே உலகமும் திராவிடமும்!

சேலம்
ஏ. சேரலாதன்
பி.ஏ., பி.டி.,

## 10

### பிரிவினை என்னும் பெரும் தத்துவம்!

'பிரிவினை' என்பது குறுகியநோக்கமல்ல; அது ஒற்றுமையின்மையை ஏற்படுத்தாது; அதனால் எந்தவித அபாயமும் இல்லை என்பதைப்பற்றியெல்லாம் முன்னமேயே விளக்கமாகக் கூறப்பட்டது. அதோடு இதை தத்துவம் என்றும் கூறலாம்.

உலகம் தோன்றியபோது ஒன்றுகத்தான் தோன்றியது. ஆனால் மனித குலம் வளர வளரத்தான்—அதனுடைய நாகரிகம் முற்ற முற்றத்தான் பல நாடுகள் தோன்றலாயின. உலக சரித்திரத்தைப் படிக்கும்போது, மிகப் பழங்காலத்தில் இருந்த நாடுகளைவிட இப்போது இருக்கும் நாடுகளின் எண்ணிக்கைதான் அதிகமென்றுதெரிய வருகிறது. 20-ம் நூற்றுண்டின் துவக்கத்தில் ஒரே நாடாக இருந்த இந்தியா இப்போது மூன்று (இந்தியா, பர்மா, பாகிஸ்தான்) நாடுகளாக ஆகிவிடவில்லையா? இதிலிருந்து பிரிவினை என்பது தவிர்க்க முடியாத சரித்திர உண்மையும், இயற்கை நிகழ்ச்சியுமாகும் என்றே புலப்படுகிறது.

பிரிவினைக்குக்காரணம் இயற்கையல்ல. மனிதர்களின் சுயநலம்தான் அதற்கு முக்கியக் காரணமென்று சிலர் கூறக்கூடும். அப்படியே இருக்கட்டும். உலகமெல்லாம் சுயநலமிகளால் நிரம்பியிருக்கும் போது, நாம் மட்டும் பொது நலமுடையவர்களாக இருப்பதால் என்ன பயன்? நமது பொது நலம், ஒரு குடம் விஷத்தில் கலக்கப்பட்ட ஒரு துளி பாலாகத்தான் இருக்க முடியும். 'எனவே ஒரே உலகத்தை நாம் ஒப்புக்கொண்டாலும், இன்றைய நிலையில் சிறிது; தன்னலமும் நமக்குத் தேவைப்படுகிறது!.

'......தாமும் வாழ்ந்து உலகத்தையும் வாழ வைக்க வேண்டுமானல்......பிரிவும், பிளவும் இல்லாத நல்ல உலகம் காணவேண்டுமானல், தமிழர்கள் முதலில் தாம் திருந்தவேண்டும். கொஞ்சம் தன்னலம் உடையவர்களாக வாழ்ந்து தற்காப்புத் தேடிக்கொள்ள வேண்டும். முதல் வகுப்பிலே எல்லாரும் உட்கார்ந்து விரல்விட்டு எண்ணிக் கணக்குக் கற்று வருகின்ருர்கள். அந்த வகுப்பில்தான் தமிழனும் இருந்து கற்கவேண்டும். தமிழனுக்கு மனக்கணக்குப் பழக்கமாக இருக்கலாம். ஆனல் அவனும் விரல்விட்டு எண்ணிக் கணக்குப் போடவேண்டும். இல்லையானல் அவனுக்கு வகுப்பில் இடம்கிடைக்காது. அவன் வெளியேற்றப்படுவான். பள்ளிக் கல்வியே பறிபோகும். தமிழன் மேல் குறையில்லை. அவன் முன்னேற்றமாக கணக்கு, அறிந்திருப்பதே குற்றம் அதற்கு என்ன செய்வது? 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பூங்குன்றனர் அரசியல் துறையில் ஓர் ஐன்ஸ்டின். அந்த மரபில் வந்தவனுக்கு விரல் விட்டு எண்ணும் சிறுபிள்ளை கணக்கு, தொல்லையாக இருக்கலாம். ஆனலும் கற்றுத்தான் தீரவேண்டும். வகுப்பில் இடம் போகாமல் காத்துக் கொண்டால்தான் வளர்ச்சிக்கு இடம் இருக்ககமுடியும்.

(டாக்டர் மு. வரதராசனர் எழுதிய 'அன்னைக்கு' பக்கம் 71-72)

நாமும் இதையேதான் சொல்கிருேம். ஆனல் ஒரே வேறுபாடு. டாக்டர் மு. வ. அவர்கள் தென்றல் நடையில் எழுதுகிருர். நாம் புயல் வேகத்தில் அதைப் பரப்பி வருகிருேம். 'வகுப்பில் இடம் போகாமல் காத்துக் கொள்ள' என்ன செய்யவேண்டுமென்பதை அவர் முற்போக்காகச் சுட்டிக் காட்டுகிருர். நாம் அதையே தனி நாடு வேண்டுமென்ற உரிமை முழக்கத்தின் மூலம் வெளிப்படுத்துகிருேம். டாக்டர் அவர்கள் பிரிவினையை ஆதரிப்பவர் என்று நான் வாதிக்கத் தயாராயில்லை. அவருடைய உவமை நம் நிலையை தெளிவுபடுத்துகிறது என்றே கூறுகிறேன்.

மீண்டுமொருமுறை மனிதகுல வளர்ச்சியை ஆராய்வோம்.

காட்டுமிராண்டிகளாய் அலைந்த மனிதர்கள் ,குடும்பமாகச் சேர்ந்தனர்; கூட்டமாக ஒன்றுபட்டனர்; நாடு உருவாகியது!

இதைப் பார்க்கும்போது மனித குலம் எப்போதும் ஒற்றுமையையே நாடியிருக்கிறது என்பது தெரிய வரும். ஆனல் இன்னொரு உண்மையை நாம் மறக்கக்கூடாது.

நாடுகள் தோன்றிய பிறகும் மனிதர்கள் குடும்பங் குடும்பங்களாகவே பிரிந்து நின்று வாழ்ந்தனர். வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவே ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டனர். 'நாடு' என்ற அமைப்பும், அரசாங்கமும் அதற்கே உதவின.

ஆகவே, ஒற்றுமையில் வேற்றுமை இருப்பது மனித இயற்கை. இது அவரவர்களின் தேவையைப் பொறுத்தது.

மேலும், 'நாடு' என்பது பாதுகாப்பும், மகிழ்ச்சியும் கூடிய வாழ்க்கையை அனுபவிக்க உதவும் ஒரு அமைப்பே! இதற்குக் கட்டுப்பாடு விதிப்பது பொருளற்றது. 'அரசியல் நூல்' கூறுவது போல் நிலப்பரப்பு (Territory), மக்கட்தொகை(Population), அரசாங்கம் (Government), அரசுரிமை (Soverignty), ஆகிய நான்கும் இருந்துவிட்டால் அது ஒரு நாடாகிறது.

நமது பாதுகாப்பான வாழ்க்கைக்கும், மகிழ்ச்சிக்கும் ஒரு நாடு தேவை. அதுதான் திராவிட நாடு! அதற்கு வேண்டிய நிலப்பரப்பு, மக்கட் தொகை, அரசாங்கம் ஆகிய மூன்றும் இருக்கின்றன. 'அரசுரிமை' மட்டும் தேவை. அது டெல்லி அரசினரிடம் இருக்கிறது. அந்த 'அரசுரிமை'யைப் பெறுவதுதான் நம் நோக்கமும் கடமையுமாகும்.

குடும்பங்களாகப் பிரிந்து வாழ்வது எப்படி நாட்டினுடைய அமைப்பைப் பாதிக்காதோ, அதுபோல் திராவிடப் பிரிவினையும் 'ஒரே உலக' இலட்சியத்தைப் பாதிக்காது.

பயிர்கள் நன்ருக வளர, வயலைப் டலப் பாத்திகளாகப் பிரிக்கிருர்கள்; மாணவர் நன்கு கல்வி கற்க பாடத் திட்டத்தைப் பல பகுதிகளாகப் பிரிக்கிருர்கள்; நூலின் பொருளை நன்ருக விளக்க அதைப் பல அத்தியாயங்களாகப் பிரிக்கிருர்கள்; ஒரு தொழில் விரைவாகவும், எளிதாகவும் முடிய வேலைப்பிரிவு (Division labour) என்ற அடிப்படையில் அதைப் பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கிருர்கள். (சான்ருக, ஊசி செய்யும் தொழிலை 18 பிரிவுகளாகப் பிரிக்கிருர்களென்று 'ஆடம் ஸ்மித்' என்ற பொருளாதார நிபுணர் குறிப்பிடுகிருர்.) பிரம்மாண்டமான அனுசக்தியைப் பெறக்கூட அணுவை இரண்டாகப் பிரிக்கிருர்கள்; மனித குலத்தின் வளர்ச்சியே தாயின் வயிற்றிலிருந்து பத்திரமாக குழந்தை பிரிவதில்தான் இருக்கிறது. கடைசியாக உடலிலிருந்து உயிர் பிரிவதுதான் மரணம் என்பதையும் மறக்கக்கூடாது.

இவையெல்லாம் 'திராவிடப் பிரிவினை'க்காகக் காட்டப்பெற்ற ஆதாரங்களல்ல.

'பிரிவினை' என்பது ஒரு தத்துவம்! மனிதவர்க்கத்தின் தோற்றம், வளர்ச்சி, வாழ்வு, அழிவு ஆகிய எல்லாவற்றிலும் உள்ளடங்கி ஊடுருவி நிற்கும் பெரும் தத்துவம்!

நமது கொள்கையைப் பொறுத்த மட்டில் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் பயன்படக் கூடியதாகத்தான் இந்தப் பிரிவினை அமைந்திருக்கிறது.

### 'இந்தியா'வில் இருப்பதால் ஏற்படும் அபாயங்கள் :-

இந்திய ஆட்சியில் நாம் வாழ்வதால் இன்று ஏற்படக்கூடிய அபாயம் அயல் நாட்டுத் தாக்குதல் தான். ஒருபுறம் பாகிஸ்தானுடன் கால்வாய்த் தகராறும், காஷ்மீர் விவகாரமும்! மற்ருெரு புறம் சீனவுடன் எல்லைத் தகராறு!

சில நாட்களுக்கு முன் டெல்லி பாராளுமன்றத்தில் பேசிய ஒரு காங்கிரஸ் உறுப்பினரே "சீன கன்னியாகுமரி வரை படையெடுத்து வந்து ஆக்ரமிக்கத் திட்டம் போட்டிருக்கிறது" என்று பேசியிருக்கிருர். இது உண்மையோ, பொய்யோ? இத்தகைய சூழ்நிலை ஒன்று உருவாகியிருப்பது மட்டும் நிச்சயம்! நாம் 'திராவிட நாட்டை' அடைந்துவிட்டால், சீனக்காரன் விந்திய மலையைத் தாண்டித் தெற்கே வருவான? 'இந்தியா'விற்கு ஏற்படும் அபாயங்கள் நம்மைத்தான் மிரட்டுமா?

'இன்றைய நிலையில் எந்த ஒரு நாடும் இன்னொரு நாட்டை விழுங்க முடியாது' என்று முன்பு கூறியதற்கும் இதற்கும் முரண்பாடாயிருக்கிறதேஎன்ற சந்தேகம் எழலாம்.

இந்த சந்தர்ப்பத்தில் கூட இந்தியாவைச் சீன பிடித்துக் கொள்ளும் என்று சொல்லவே முடியாது. திடீரென்று சீன விமானங்கள் இங்கு மங்குமாக (தென்னடு உட்பட) இரண்டொரு தாக்குதல்கள் நடத்திவிட்டுப் போய்விட்டால், அதனல் விளையும் கஷ்ட நஷ்டங்களை நாமும் சகித்துக் கொண்டுதானே ஆகவேண்டும்?

இத்தகைய அபாயத்தை எதிர்பார்ப்பதற்கு இந்தியாவின் 'நடுநிலைமைக் கொள்கை'யும் ஒரு காரணமாகும்

நடுநிலைமைக் கொள்கை சிறந்ததுதான். ஆனல் இன்றைய நிலையில் அது ரஷ்யா, அமெரிக்கா ஆகிய இரு முகாம்களின் ஆதரவையும் இழக்கவேண்டிய நிலையைத்தான் ஏற்படுத்தியிருக்கிறது.

எடுத்துக்காட்டாக, சூயஸ் கால்வாயை நாசர் பிடித்துக் கொண்டபோது, அவர் செய்தது சரி என்று பேசியது இந்தியா. இதனல் பிரிட்டன், அதனுடன் சேர்ந்த அமெரிக்கா முதலிய நாடுகளின் மறைமுகமான வெறுப்பை சம்பாதித்துக் கொண்டது.

பின்னர், ஹங்கேரியில் புரட்சி நடந்தபோது ரஷ்யா செய்வது அநியாயம் என்று கூறியது இந்தியா. அதன் மூலம் ரஷ்யாவின் வெறுப்பைப் பெற்றுக் கொண்டது.

சிறிது நாள் கழித்து, காஷ்மீர் பிரச்சனை ஐ.நா. சபையில் வோட்டெடுப்புக்கு வந்தபோது, இரு முகாமைச் சேர்ந்த வல்லரசுகளுமே இந்தியாவின் கால்களை வாரிவிட்டு விட்டன!

நடுநிலைமைக் கொள்கையின் விளைவைப் பார்த்தீர்களா?

ஆனல், ரஷ்யாவும் அமெரிக்காவும் இந்தியாவுக்கு எவ்வளவோ பொருளாதார உதவிகள் புரிகின்ற

(6-ம் பக்கம் பார்க்க)

5-ம் பக்கத் தொடர்ச்சி

னரே என்று கேட்கலாம். அந்த நாடுகளின் தலைவர்கள் இங்கு வந்து சுற்றுப்பயணம் செய்கின்ற னரே என்று கேட்கலாம். இவை யெல்லாம் இந்தியாவைத் தமது கட்சியில் சேர்த்துக் கொள்ள அவை செய்யும் தந்திரங்களே யாகும்.

இப்போது சீனு இந்தியாவைத் தாக்கினுல் அமெரிக்கா என்ன செய்யும்? "இனியாவது இந்தியத் தலைவர்களுக்குப் புத்தி வந்து, நம் பக்கம் சேர்ந்து விடுவார்கள்" என்று எதிர்பார்க்கும். அது நடக்காவிட்டால், தனது மன மார்ந்த அனுதாபத்தைத் தெரி வித்துக் கொண்டு, அதோடு நின்று விடும்.

ரஷ்யா என்ன செய்யும்? "சீனு வுக்தப் புத்தி சொல்லும்படி இந்தியா நம்மிடம் வந்து கேட்கும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அதை நம் பக்கம் இழுத் துப் போட்டுக் கொள்ளலாம்" என்று நினைத்திருக்கும். அந்த நினைப்பு தவருனுல், "சீனு செய் தது தவறுதான்" என்று மூன்றே வார்த்தைகளில் முணு முணுத்து விட்டு ஊமையாகிவிடும்.

இந்தியாவின் அயல் நாட்டுக் கொள்கையைக் குறை கூறவில்லை. ஆனுல் இன்றுள்ள யதார்த்த நிலைமை இது.

இதற்கு மாருக, இந்தியாவும் சீனுவை எதிர்த்துப்போர் செய்கிற தென்று—அதில் வெற்றியும் பெறு கிறதெனறு வைத்துக் கொள்ளு வோம். போர்க் காலத்திலும் அதற் குப் பின்னும் ஏற்படுகின்ற கஷ்டங் களுக்கு, பொருளாதாரச் சிக்கல் களுக்குத் தென்னவராகிய நாமும் ஆட்பட்டுத் தானே ஆக வேண் டும்? அல்லது போரில் தோற்ருல் வடவரோடு நாமும் சேர்ந்து சீனு வுக்கு அடிமையாகத் திகழ வேண் டும். பொம்மையைப் போலிருக் கும் ஐ.நா. மன்றம் நமக்கு உதவும் என்று எதிர்ப்பார்ப்பதும் வீணே!

அடுத்து, இந்திய அரசினரின் பொருளாதாரக் கொள்கையும் திருப்திகரமாயில்லை. அவர்கள் ரூபாய் நோட்டு அடித்து வெளி யிடும் வேகத்தைப் பார்த்தால் விரைவில் பெரிய பணவீக்கம் (Inflation) ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. பொருளாதார நிபுணர்களும் இதையே எச்சரிக்கிருர்கள்.

முதல் உலகப் போருக்கும் பின் ஜெர்மனியில் ஒரு 'பயங்கரமான 'பொருளாதாரச் சீர் குலைவு' (Economic Collapse) ஏற்பட்டது. ரூபாய் நோட்டுகளின் மேல் மக்க ளுக்கிருந்த நம்பிக்கை மறைந்து, நாட்டின் பொருளாதார இயக்கமே நின்று போய்விட்டது. அதைப் போல இந்தியாவிலும் ஏற்பட் டால்.........?

ஒரு பொருளாதார நிபுணர் இப் படி எச்சரிக்கிருர்.

"இந்திய அரசாங்கம் இப்படியே நோட்டடித்துக் கொண்டிருந்தால், ரூபாய்க்குள்ள மதிப்பு வெகு சீக் கிரத்தில் குறைந்துவிடும். பிறகு ஒரு காலம் வரும். அப்போது ஒரு படி அரிசி வாங்குவதென்ருல், ஒரு மூட்டை நிறைய ரூபாய் நோட்டுகளைக் கட்டித் தூக்கிக் கொண்டு, போகவேண்டும்!"

எவ்வளவுபயங்கரமானநிலைமை? இந்நிலை உருவானுல், அப் போதுதான் தென்னகத்து மக்கள் உணருவார்கள் — திராவிட நாட் டைச் சீக்கிரம் பிரித்துக்கொள்ளா தது எவ்வளவு பெரிய தவறு என்று!

இப்போதே நாட்டில் கள்ள நாணயங்கள் பெருகிவிட்டன. இன்னும் சிறிது காலம் சென்ருல், முகம்மது-பின்-துக்ளக்கின் ஆட்சி யில் ஏற்பட்டதுபோல் 'வீட்டுக் கொரு நாணயச்சாலை' ஏற்பட்டு விடுமோ என்றுகூட பயப்பட வேண்டியிருக்கிறது. கள்ள நாண யங்கள் மலிந்தால் பொருளாதார விதிப்படி Gresham's law: Bad money tends to drive good money out of circulation," நல்ல நாணயங்கள் புழக்கத்தில் இருந்து மறைந்துவிடும்; மக்கள் கலகம் செய்யவும் தயாராகி விடுவார்கள்.

இந்திய ஆட்சியில் இத்தனை அபாயங்களும் தென்னக மக்களைச் சூழ்ந்து நிற்கின்றன.

(தொடரும்)

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

மனத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்



தயாரிப்பாளர்:
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு-தஞ்சை

# பம்பாயில் சேலம் க. இராசாராம் முழக்கம்

11-ம் பக்கத் தொடர்ச்சி

தாயகத்தில் தி. மு. க. அவ்வப் போது ஆற்றிவரும் பெரும்பணி களைத் தொடர்ந்து, வடவர் பகுதி யிலும் நமது குரல் ஒலிக்குமளவில் பிரச்சார இயக்கமாக அமைந்து இயங்கிவரும் பம்பாய் தி மு. க. விற்கு உங்கள் நல்லாதரவும் அன் பும் பெருக வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

ஃ

பம்பாய் பொதுக் கூட்டத்தில் சேலம் க. இராசாராம் முழக்கம்:

சனநாயக அடிப்படையில் இய ங்குவது தி. மு. கழகம் மாற்ருரின் ஏச்சுக்கும் எரிச்சலுக்குமிடையே கழகம் ஏறு நடை போடுகிறதென் ருல் அதன் விடுதலைக் கொள் கையே காரணம்.

பம்பாய் தி.மு.க சார்பில் கடந்த 20—6—61ல் நடைபெற்ற இலங் கைத் தமிழர் உரிமை அடக்கு முறைக் கண்டன ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ள வந்த சேலம் க இராசா ராம் அவர்கள், இன்று தி. மு. கழ கம் பெருவளர்ச்சி பெற்றுள்ளதென் ருல் அது கொண்டுள்ள விடுதலைக் கொள்கையும், சனநாயக அடிப் படையில் கழகம் இயங்கிவரும் தன்மையுமே காரணம் என்று, தாராவி வ. உ. சி. திடலில் நடை பெற்ற மாபெரும் பொதுக்கூட்டத் தில் கூறினுர்.

அவர் மேலும் பேசியதாவது:

நான் எதிர்பாராத அளவில் பெரும் தொகையினராய் இன்று ஊர்வலத் தில் கலந்துகொண்டு நமது கண் டனக் குரலை வடவர்களும் அறியும் அளவில் முழக்கங்கள் செய்து ஊர் வலத்தைச் சிறப்பித்ததைக் கண்டு பெருமகிழ்ச்சி யடைகிறேன். ஊர் வலத்தில் சென்றவர்கள் சில ஆயி ரம் பேர் என்ருல் நம்மைப்பற்றியும் இலங்கை அரசின் அடக்குமுறை யினையும் தெரிந்துகொண்டவர்கள் பல்லாயிரம் பேராவர். அந்த முறை யில் நம்மைப் பற்றி நமது விடுதலை இயக்கத்தினைப்பற்றி அறிந்தவர்கள் உலகின் பல பாகங்களிலுமுண்டு. ஆரம்பகால முதலே ஆட்சியிலிருப் போரும் மற்றையோரும் நம்மைக் கேலியும் கிண்டலுமே செய்து வரு கின்றனர். ஒவ்வொரு சந்தர்ப்பங் களிலும் நாம் மேலும் வளர்ந்து கொண்டே போவதைக் கண்ட மாற்ருர் ஆரம்பத்தில் நம்மைக் கேலி கிண்டல் செய்தும், பின் அச்சுறுத்தியும்அடக்குமுறைகளைக் கையாண்டும், நமது வளர்ச்சி குறையாதது கண்டு இன்று நம் மிடமிருந்து பிரிந்து போனவர்களைக் கொண்டே நம்மைத் தூற்றச் செய் கின்றனர். எவரெவர் கழகத்தின் பேரில் மாசு கற்பிக்க எந்த அள வில் முயன்ருலும், கழகத்தின் திரா விட விடுதலையே மூலக்கொள்கை யாயிருக்கும்வரை நிச்சயம் தோல் வியைத்தானடைவர்.

சிற்றூர் கிளைகளிலிருந்து வட்ட மும். வட்டத்திலிருந்து மாவட்ட மும், மாவட்டத்திலிருந்து பொதுக் குழுவும், பொதுக்குழு பொதுச் செயலாளரையும் தேர்ந்தெடுக்கு மளவில் முறையான சனநாயக அடிப்படையில் இயங்கி வருவது கழகம். பல்லாயிரக்கணக்கான கிளைகளும், பல லட்ச உறுப்பினர் களையும் கழகம் கொண்டுள்ளதை அறிந்து மலைத்தாலும் அதனை வெளிச்சொல்ல மறுக்கும் மாற்றுக் கட்சிப் பத்திரிகைகள் சம்பத் வில கியபோது 25 ஆயிரம் பேர் விலகி ஞர்கள் எனச் செய்தி வெளியிட் டன. அந்த அளவில் அவ்வளவு பேர் விலகியும் கழகத்தின வளர்ச்சி சிறிதும் பாதிக்கப்படவில்லை எனும் போது கழகத்தில் 25 ஆயிரத்திற் கும் அதிகமானவர்கள் இருக்கிருர் கள் என்பதை அவர்களே கூறு கிருர்கள் என்பதை எண்ணி நாம் மகிழ்கிருேம்.

ஓட்டு முறையில் நம்பிக்கை கொண்டது நம் கழகம். தேர்தலில் நின்றபோதுகூட திருச்சி மாநாட் டில் ஓட்டு மூலம் பொதுமக்களின் எண்ணத்தை அறிந்துகொண்டே போட்டியிடத் துணிந்தது. மக்க ளின் எண்ணத்தை அறிந்து கொண்டே போட்டியிடத் துணிந் தது. பொதுமக்களின் எண்ணத் திற்கு மதிப்பளித்து அவர்களின் ஆதரவு பெற்று இயங்கும் கட்சி யால் மட்டுமே நாட்டின் விடுதலை யைப் பெற முடியும். மக்கள் ஆட்சி நடத்திகானு நாட்டில் என் தருமா என்னும் தலைவர் வெள்ளையர்கட்கு எதிராக பகிஷ்காரம் நடத்திய போது வெள்ளையர்கள் பணிந்தார் கள். கானு சுதந்திரமடைந்தது.

இந்த முறையில் தென்னுப்பிரிக்க நாடுகடான தங்கநிகா, கெனியா, அல்ஜீரியா, உகாம்பா, சைப்பிரஸ், டோகாலாந்து போன்ற நாடுகள் நமக்கு உதாரணமாயுள்ளன 13 ஆயிரம் சதுர மைல் பரப்பளவே உள்ள ஈவ் எனும் நாடுதான் கானு வுடன் இணையவேண்டும் என் பதில் ஐக்கிய நாடுகள் சபை தலை யிட்டு அந்த மக்களிடையே வாக் கெடுப்பு நடத்தி ஈவ் பிரதேசத்தை பெரும்பான்மை மக்கள் வாக்கின் படி கானு நாட்டுடன் இணைந்துள் ளது. இந்த முறையில் திராவிட மும் உருவாகாதா? கேரளத்திலும் கன்னடத்திலும் ஆந்திரத்திலும் படிப்படியாக கிளைகள் துவங்கி வருகின்றன. வருகிற பொது மாநாட்டிற்கு கேரளாவிலிருந்தும் கன்னடம் ஆந்திரத்திலிருந்தும் பிரதிநிதிகள் வரவிருக்கின்றனர். கெனியாவும், உகாந்தா, தங்கநிகா வும் இன்று இலண்டன் மாநகரத் தில் கூடி மூன்று நாடுகளும் எப் படி ஒரு கூட்டாட்சி அமைப்பது என்பதுபற்றி பேசுகிருர்கள் பெரு மளவில் அடுத்த நாட்டின் துணை யுடன் இயங்கக்கூடிய பிரிவுகளைப் பொதுவாகவும் மற்ற பலவற்றையும் சுயமாகவும் கொண்டு நிச்சயமாய் ஒரு கூட்டாட்சி அமைத்து அவை இயங்கமுடியும். அப்படிப் பார்க் கும்போது அம்முறையிலேயே திரா விடத்திலும் நான்கு நாடுகள் இணைந்து கூட்டாட்சி நடத்தவும் இயலும். வடநாடு தென்னுட்டைப் புறக்கணித்து வருவதை மக்கள் கருத்தில் விடுதலை உணர்வு வேருன்றி வருவதாயும் திராவிட விடுதலைக்காக தென்னகத்தில் கழ கப் பணி புரிகிறது. வடவரின் சூழ்ச்சிகளை அவ்வப்போது எடுத் துரைக்கிறது. கண்ட்லா எனும் ஒரு களிமண் நிறைந்த இடத்தைத் துறைமுகமாக்க முயற்சிக்கும் வடக்கு, தூத்துக்குடித் துறை முகத்தை விரைவில் கவனிக்க மறுக்கின்றது. இவற்றையெல்லாம் நல்ல முறையில் வடநாட்டில் பிரச் சாரம் செய்து தி. மு. க.விற்கு உறு துணையாயுள்ள பம்பாய் தி. மு. க. விற்கு நன்றியும் கூறுகிறேன்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

உள்ளத்தில் களங்கம் கொண்டோர் இவர். எனவே கேட்கும் உரிமையிலும் 'அது' இருக்கிறது.

பார்வை பழுதானோர் பாதை காட்டுதல் போல பண்பு தவறிய இவர் விடுதலைக்கு 'வியாக்கியானம்' தருகிறார், விதவிதமாக.

எந்த இயக்கம் கொள்கைக்காக பிறந்ததோ, எந்த இயக்கம் சமுதாயத்தில் எதிர் நீச்சலடித்து வெற்றி பெற்றதோ எந்த இயக்கம் தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற தலைப்புகளில் அரசியல் விழிப்புணர்ச்சிக்கு உருவம் கொடுத்ததோ, அந்த இயக்கத்தினிடம் தமிழர் நலன் பத்திரமாக இருக்கும்

தமிழரின் நலனை நாடும் ஒரு இயக்கத்திற்கு தமிழர் நலனை நாடுவதாகச் சொல்லிக் கொள்ளும் பிறிதொரு கட்சி என்றைக்குமே எதிரி அல்ல. எதிரியாக விளங்குகிறது என்றால் நிச்சயமாக அந்த கட்சி போலி வேடத்தோடு உலவுகிறது என்றுதான் பொருள்.

இந்த மூவரை கவனிப்போம்;

ஆற்றில் ஒரு காலும், சேற்றில் ஒரு காலும் வைப்பது ம. பொ. சி. யின் தினசரி அரசியல். திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்திய ஒரு செயலே அவரது திராணியைத் தெளிவுபடுத்தும்.

ஆதித்தனாரிடம் எந்த வரலாறு இருந்தாலும், ஒழுங்கான அரசியல் வரலாறு மட்டும் இல்லவே இல்லை.

சம்பத்தோ, 'தி. மு. கழகத்தை ஒழித்துவிட்டுத்தான் மறு வேலை' என்று தீர்மானம் செய்தாற்போல உலா வருகிறார் எங்கும்.

இந்த நிலையில் 'தமிழர் நலனை நாடும் கட்சி' என்று ஒரே சுருதியில் ஓலமிடுவதில் மட்டுமே இவர்களிடம் ஒற்றுமை இருக்கிறது. அந்த ஒற்றுமையும் சந்தையில் எடுபடவேண்டும் என்பதற்குத் தான்!

தி. மு. கழகம், சிறு மன நெகிழ்ச்சியிலோ, விருப்பத்திலோ, அரசியல் வேட்டைக்காகவோ தோன்றிய கட்சியல்ல.

அதன் நீண்ட சரித்திரத்தின் பக்கங்கள் தெளிவாலும், தியாகத்தாலும் நிரம்பியிருக்கின்றன. இன்றைய மலர் சொரிதலுக்கு முன்னாலே அது கண்ட கல்லடியும் சொல்லடியும் ஒரு சமுதாயத்திற்காக கட்சி பெற்ற தொல்லைகளும், துயரங்களும் ஆகும்.

கழகத்தின் இன்றைய தலைவர்கள், நாயர், தியாகர், நடேசனார், பன்னீர் செல்வம் அழகிரிசாமி போன்ற பெருமக்களாலான சங்கிலித் தொடரின் இன்றைய கண்ணிகளே தவிர புதிய வருகையினர்களல்ல!

எந்த சமுதாயத்திற்காக கழகம் பாடுபடுகிறதோ, அந்த சமுதாயத்தின் பெருவாரியான மக்கள் சக்தி இன்று கழகத்தின் பின்னால் திரண்டிருக்கிறது. இந்த ஒற்றம் மிகுந்த காட்சியினைக் கண்டு பூரிப்பு கொள்ள வேண்டிய பிறகட்சியினர் புழுங்கித் தவிப்பதிலிருந்து அவர்கள் 'போலிகள்' என்பதை தெளிவு படுத்திவிட்டார்கள்!

என்னதான் அரிதாரம் பூசிக் கொண்டாலும் ஆட்டம் முடிந்ததும் வேடத்தை கலைத்துவிட வேண்டியதுதானே! அந்த 'வேளை' வந்துவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

''மூவர் உலா''வின் துவக்கம் என்னவோ மோகன ராகமாக ஒலித்தாலும் இறுதிக்கட்டம் முகாரியில்தான் முடியப்போகிறது!

ஏனென்றால் எரிச்சலிலும் நப்பாசையிலும் பிறப்பெடுத்த எந்தசக்தியும் நிலைத்து நின்றதாக வரலாறே இல்லை.

நிச்சயமாக ஒரு சமுதாயத்தின் வாழ்விற்காக தோன்றிய இருவேறு கூறுகள் ஒன்றை ஒன்று மோதிக் கொள்ளாது. அப்படி மோதினால், பகைப்புலனாக மாறிய பகுதி சுய நலக் கும்பலாகத்தான் இருக்க வேண்டும். அதன் முடிவுரையும் அவ்வளவு 'சுபமாக' இருக்காது!

முன்தோன்றிய மூத்த இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் தான் தமிழுணர்ச்சியை, எழுச்சியை பாமரனுக்கு வழங்கிற்று. தமிழகத்திலே தோன்றிய இயக்கம் தமிழ், தமிழர், தமிழகம் பற்றி பேசுவது அதிசயமல்ல. சம்பத் வேண்டுமானால் இதனை விசித்திரமாக வியாக்கியானம் செய்யலாம்.

தமிழன் சேரன் செங்குட்டுவன் பற்றி பேசும்போது, கேரளத்தவன் வேலுத்தம்பியின் பெருமையைச் சொல்வான். தெலுங்கன் கிருஷ்ண தேவராயரின் மகத்துவங்களை தெரிவிப்பான். இதன் மொத்த உருவம் தான் திராவிட இன உணர்ச்சி என்பது. கண்ணதாசன் கூட முன்பு ஒருமுறை குறிப்பிட்டார்.

தமிழரசுக் கழகத் தலைவர் மா. பொ. சி. கட்டபொம்மனை பாராட்டுவதைவிட நாம் பாராட்டுவதில் தான் அதிக நியாயம் இருக்கிறது. கட்டமொம்மன் தெலுங்கன் — திராவிடன்!

கவிஞரே இப்போதைக்கு இதனை மறந்த நிலைக்கு, சம்பத் துருப்பிடித்த வாதத்தை விட்டெறிந்ததில் அதிசயமில்லை!

திராவிடம், திராவிடநாடு, திராவிட நாகரீகம் இவைகளை சம்பத் இன்னும் மறுக்கவில்லை. நல்ல வேளையாக, அவை வரலாற்றுச் சான்றுகளாக எஞ்சி நிற்கின்றன. பிற பகுதிகளில் கழகம் வளரவில்லையே. இன உணர்ச்சி எழவில்லையே என்பதுதான் அவர் வாதம். இதனை பிறர் சொன்னபோது நமக்கு சிரிப்புவந்தது; சம்பத் சொல்லும்போது பரிதாபம்தான் ஏற்படுகிறது. இத்தனை நாட்கள் இங்கு இருந்துவிட்டு போன சம்பத் தாயிற்றே!

பிற பகுதிகளில் எழுச்சியும், உணர்ச்சியும் இருக்கத்தான் செய்கின்றன. அவைகளுக்கு உருவம் கொடுக்க இயக்கத்திற்கு இன்னும் வலிமையான அரசியல் செல்வாக்கு வேண்டும். அந்த செல்வாக்கை வளர்த்துக் கொண்டிருக்கும் போதே, சம்பத் வழுக்கிவிட்டாரே!

'திராவிடநாடு திராவிடருக்கே' என்போர் 'தமிழ் நாடு தமிழருக்கே!' என்று சொல்வோருக்கு மாறுபட்டவர்களோ, எதிரிகளோ அல்ல'என்று முன்பே இயக்கம் ம. பொ. சிக்கும், ஆதித்தனுருக்கும் தெளிவுபடுத்தியிருக்கிறது.

இதனைத்தானே சம்பத்திற்கும் பதிலாகத் தர முடியும்?

''கேரளம் சுதந்திரமாகப் பிரியவேண்டும் என்று நாங்கள் சொல்லும்போது தமிழகமும், ஆந்திரமும், மைசூர் மாநிலமும் வடநாட்டு பிடியிலிருந்து பிரிந்து விடுதலை பெறவேண்டும் என்றே சொல்கிறோம்.''

சுதந்திர கேரள கிளர்ச்சித் தலைவர் மத்தாய் மஞ்சூரானின் கருத்து இது.

''திராவிடநாடு திராவிடருக்கே!' என்பதின் பிரிதொரு வடிவம் தானே, இந்தக் கருத்து. சம்பத்துக்கு இது புரியாது. புரியும் நிலையிலும் இன்று அவர் இல்லை.

தமிழ்நாடு தமிழருக்கே!

கேரளம் கேரளத்தவருக்கே!

ஆந்திரநாடு ஆந்திரருக்கே!

கன்னடபூமி கன்னடியருக்கே!

இந்த நான்கு முழக்கங்களிலும் ஒரு ஒரு தனி முழக்கம், அடிநாதமிட்டு இழைந்து இழைந்து இனிமையாக சுருதி கூட்டுகிறது அது தான்;

திராவிடநாடு திராவிடருக்கே!

ஃ

# பரவசமூட்டும் பாண்டியன் நகரம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூன்றாவது பொது மாநாடு நிகழ்வுற இருக்கும் திருப்பரங்குன்றம் பகுதியில், மாநாட்டுக்காக அமைக்கப்பட்டுள்ள பந்தல் மூவாயிரம் அடி நீளமும், ஆயிரம் அடி அகலமும் கொண்டதாக அமைக்கப்பட்டுவருகிறது. மாநாட்டுப்பந்தலுக்குப் 'பாண்டியன் நகர்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

'பாண்டியன் நகரை'ச் சுற்றிக் கோட்டைச் சுவரைப்போல் வளைவொன்று துத்தநாகத் தகடுகளால் அமைக்கப்பட்டு வருகிறது.

உணவு விடுதிக்காக அமைக்கப்பட்டுள்ள பந்தல்போல் இதுவரை எம்மாநாட்டிலும் அமைக்கப்பட்டதில்லை என்று கண்டோர் வியந்து கூறுகின்றனர்.

மாநாட்டுப் பந்தல் முகப்பை மாயூரம் தோழர்கள் மாயூரம் தென்னங் கீற்று வேலைப்பாடுகளுடன் அமைத்துவருகின்றனர். 'இதற்கு ஈடாக, இந்தியத் துணைக் கண்டத்தில் இதுவரை எழில் மாடம் அமைக்கப்பட்டதில்லை' என்று கண்டவர் களிபேருவகையோடு கூறுகின்றனர்.

மதுரை ஒளி ஓவியத்தினர், அரங்கம் முழுமையும் ஒளிமயமாக்க அரும் பாடுபட்டுவருகின்றனர். ஆங்காங்கு நூற்றுக்கணக்கான மின் விளக்குகள் நிறுத்தப்பட்டுவருகின்றன. வண்ண மின் விளக்கு அலங்காரங்கள் மனத்தைக் கவரும் வண்ணம் பந்தல் முழுவதும் அமைக்கப்படுகிறது. இரவைப் பகலாக்கும் பணியில், மதுரை பலராமன் திறனுடன் உழைத்துவருகிறார்.

இலட்சக்கணக்கில் திரளும் திராவிடப் பெருமக்களுக்குக் குறைவற உணவு படைக்க அண்ணா பத்தி பாண்டியனும், ஏ. வி. ஏ. சவுந்தர பாண்டியனும், 'அண்ணா உணவு விடுதி' அமைத்துள்ளனர். ஒரே நேரத்தில் பத்தாயிரம் பேர் அமர்ந்து உணவு உண்ணத்தக்க வகையில், பரிமாற 500 பேர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏராளமான பொருட் செலவில், திராவிடத் தாயின் திருவுருவைச் சமைத்துள்ளனர். இலட்சிய எழுச்சிமிக்கோர், போற்றிடும் திருவுருவம் அது!

திராவிடத்தாயின் தலைமகனும் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவம் படைக்கப்பட்டுள்ளது. இவ்வரிய திருவுருவம், நம்மையெல்லாம் தாயின் விலங்கொடிக்க— திரண்டெழ அழைக்கிறது.

மற்றும், கலைக் கண்காட்சி கண்கொள்ளாக் காட்சி!

---

### திருத்தம்

இந்த இதழ் 15-ம் பக்கத்தில் அச்சாகியுள்ள தி. மு. க. முதல் மாநில மாநாட்டுச் செய்தியில் 1951 என்பதற்குப் பதில் 1961 என்று தவறாக அச்சாகிவிட்டது. வாசகர்களைப் பிழை திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம். —(ஆ—ர்)


## திராவிடன்

அடுத்த இதழ்.

பொது மாநாட்டின் நிகழ்ச்சிகள்

படங்கள்

அண்ணா முன்னணி வீரர்களின்

சொற்பொழிவுகள்

ஆகியவற்றையும் சிறப்புக் கட்டுரைகளையும் தாங்கி பொதுமாநாட்டின்

சிறப்பிதழாக

22-7-61 அன்று வெளிவரும்.

அதிக பக்கங்கள் - விலை. 25 காசு

# குடும்பத்து அண்ணன்

அண்ணா !

இந்த மூன்று எழுத்துக்களடங்கிய சொல்லுக்கு உள்ள மகத்தான சக்தியை, மாற்றாரும் அறிவர்! இளைஞர் மட்டுமின்றி முதியோரும் இதயபூர்வமாக அண்ணா என்று அழைக்கப்படும் பெருமைக்குரிய அந்த மனிதகுல மேதை, நமது குடும்பத்து அண்ணன் அறிஞர் அண்ணா அவர்களின் பொதுப் பணியை விவரிப்பதென்பது எளிதல்ல!

திராவிடத்தின் அரசியல் வரலாற்றில் மாபெரும் திருப்பத்தை உண்டாக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான் !

பத்திரிகை பலத்தைத் தங்களுக்கே உரிமையுடையதாக ஆக்கிக் கொண்டவர்கள் — பெரும் வசதியும் அதிகார வர்க்கத்தின் ஆதரவையும் பெற்று வாழ்ந்தவர்கள் தங்களது மனச்சாட்சிக்கும், மனிதாபிமானத்துக்கும் துரோகம் செய்துகொண்டு இருட்டடிப்பு வேலை செய்து வந்தனர். இவ்வித வஞ்சக புரியினரின் ஆதிக்கத்திற்குச் சிறிதும் வளைந்து கொடுக்காமல் கொள்கையே வாழ்வின் இலட்சியம் என்ற உறுதிப்பாடுடன் பணியாற்றித் திராவிடத்தைத் தட்டி எழும்பிய நமது அண்ணாவின் பொது வாழ்வினை எக்கட்சியினரும் குறை சொல்ல முடியாது என்று திட்டவட்டமாகக் கூறுவேன்.

அவ்வித சிறப்புக்குரிய அண்ணா அவர்களின் வழிநின்று கழகக் குறிக்கோளை செயல்படுத்த வேண்டியது நம் ஒவ்வொருவரின் நீங்காக் கடமையாகும். மதுரையம் பதியில் — திருப்பரங் குன்றத்தில் நடைபெறும் பொது மாநாட்டில் திரளும் மறவர் கூட்டம் மனத் தூய்மையுடன் அத்தகு உறுதிப்பாட்டினை எடுத்துக்கொள்ளவேண்டும்.

சுதந்திரத் திராவிடம் நமது பிறப்புரிமை — திராவிடப் பெருங்குடி மக்கள் ஒவ்வொருவருக்கும் ஈடு இணையற்ற செல்வம் இதுவேயாகும். திராவிட சமதர்ம சுதந்திரக் குடியரசுக் கூட்டாட்சியை நிறுவுவதின் வாயிலாக நமது எதிர்காலச் சந்ததிக்கு அழிக்க முடியாத செல்வத்தைத் தேடி வைத்துச் செல்லுகிறோம் என்ற மன நிறைவு கொண்டவர்களாகிறோம். இதைவிட மகத்தான சொத்து வேறென்ன இருக்கமுடியும்?

உலகில் இன்று சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் விடுதலைபெற்று தனி அரசு நடத்துவதைக் காண்கிறோம்.

உலகெங்கும் உள்ள எண்ணற்ற நாடுகள் சுதந்திரத் தனி அரசு அமைவதில்தான் தங்களின் நல்வாழ்வு அடங்கியிருக்கிறது என்பதை நடைமுறையில் கண்டு வருகின்றன!

இந்நிலையில் நாம் திராவிடத் தனி அரசு அமைப்பது, உலக ஒற்றுமைக்குக் குறிப்பாக இந்திய ஒற்றுமைக்குக் கேடு விளைவிக்கும் என்று இந்தியப் பேரரசு இனியும் விதண்டாவாதம் புரிவது அறிவுடைமையாகாது. இதனை ஆளவந்தார்கள் உணருதல் வேண்டும்.

1945ம் ஆண்டில் 55 நாடுகளைக் கொண்டிருந்த உலக நாடுகள் மன்றம் (ஐக்கிய நாட்டுச் சபை) இன்று 100 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கின்றது. இந்நாடுகளுக்கெல்லாம் அவ்வப்போது வாழ்த்து கூறிவரும் நேரு பண்டிதர் ஆட்சி நமது உரிமைகளைப் பறித்து ஏகபோக மிராசு செலுத்தி வருகிறது! இது நீதியா யென்று கேட்டால் அடக்குமுறைகளை அவிழ்த்து விடுகிறது! திராவிடப் பெருங்குடி மக்களின் உரிமையை அடக்குமுறையால், குண்டாயிசத்தால் பறித்துக் கொழுத்து நீண்ட காலமாக வாழலாம் என்று இந்திய ஏகாதிபத்தியம் எண்ணுமேயானால், அந்த எண்ணமே அதற்கு அழிவை உண்டாக்கும் என்பதை அறிவுறுத்துகிறோம்.

தமிழகம், ஆந்திரம், கருநாடகம் கேரளம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களும் தனி ஆட்சி பெற்று, குறைந்த அளவில் பொது அதிகாரங்களைக் கொண்டதும், சமத்துவ பிரதிநிதித்துவத்தைக் கொண்டதுமான திராவிட சுதந்திர குடியரசுக் கூட்டாட்சியைக் காண்பதினால் இந்திய ஒற்றுமை சீர்குலைந்து விடும் என்று கூப்பாடு போடுவோருக்கு அழுத்தந் திருத்தமாகக் கூறுவோம். உங்களது இந்த ஆசாபாசங்களும் அரசியல் விவேகமற்ற முரட்டுத் தனமும்தான் இந்திய ஒற்றுமையை அழித்தொழிக்குமேயல்லாது வேறில்லை.

வெள்ளையர் ஆட்சிக்கு முன் இந்தியா என்ற ஒரு அமைப்பு இருந்ததா? அல்லது பாரதம்—இராமாயணம், பகவத்கீதை போன்றவைகளில்தான் இந்தியா இருக்கிறதா?

திராவிடம் என்பது ஒன்று உண்டா, அது எப்போது எங்கு இருந்தது என்றெல்லாம் குருட்டுத் தனமான அரசியலைப் பேசும் அப்பாவிகள், காலம் காட்டும் எச்சரிக்கையை மதித்து நடக்க முற்பட வேண்டும்.

இந்திய ஒற்றுமை என்பது பிடிவாதத்தால் — முரட்டுத்தனத்தால் அதிகாரத் திமிரால் அமைவதல்ல. பரந்த உள்ளத்தால், அரசியல் விவேகத்தால் அமையக்கூடிய ஒன்றாகும். ஏதோ சந்தர்ப்ப வசத்தால் கிடைத்துவிட்ட அரசியல் அதிகாரத்தை தங்களின் விருப்பு வெறுப்புக் கேற்றவாறு பயன் படுத்திக்கொண்டு அதற்கேற்ற அரசியல் சட்டத்தை — அதுவும் பிரதிநிதித்துவமற்ற சபையால் உருவாக்கிக்கொண்டு, அரசை நிறுவி இந்தியத் துணைக்கண்டத்தின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கைக் கொண்ட மக்களின் மீது திணிப்பது கொடிய அநீதியாகும்.

வெள்ளையர் ஆட்சி தனது துப்பாக்கி முனையால் இந்தியாவை உருவாக்கிச் சுரண்டிக் கொழுத்து வந்ததைப்போன்றே தென்னகத்தை இந்தியப் பேரரசு ஆதிக்கம் செலுத்துவதும், அதற்குப் பெயர்தான் தேசியம் என்றும் மேலும் முரட்டுத் தனம் காட்டப்படுமேயானால் அந்தத் தேசியம் விரைவில் செத்து மடியும் என்பது உறுதி.

திராவிட மக்கள் தாங்கள் ஆண்ட நாட்டைக் கேட்கின்றனரேயல்லாது டெல்லி ஏகாதிபத்தியத்தை பிச்சைக் கேட்கவில்லை. எனவே இந்திய ஒற்றுமை நிலவ வேண்டும் என்று இதயபூர்வமாக எண்ணுபவர்கள் யாராயிருப்பினும் வெள்ளையர் ஆட்சிக்கு முற்றுப் புள்ளிவைத்த அன்றே அந்த வெள்ளையர் ஆட்சி உருவாவதற்கு முன்பு ஆண்டிருந்த மக்களிடம் அந்தந்த நாட்டை ஒப்படைத்து தனி அரசு மலரச்செய்து அதன் வாயிலாகத் தோழமையை வளர்த்து அதன் அடிப்படையில் இந்திய ஒற்றுமையை வளரச் செய்திருக்க வேண்டும். ஆனால் வெள்ளையருக்கு இருநூறு ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்ததைப்போலவே எங்களுக்கும் 200 ஆண்டுகள் அடிமைப் பட்டிருங்கள் அதுதான் ஏக இந்தியா என்று ஏக இந்தியாக்கள் வரட்டுக் கூச்சல் போடுவார்களேயானால்இந்தியா என்ற அமைப்பை உலகப்படத்திலிருந்து அழித்தவர்கள், இந்தியா என்ற சொல்லை வழக்கிலிருந்து ஒழித்தவர்கள் அந்த ஏகாதிபத்ய வாதிகள்தான் என்று எதிர்காலச் சரித்திரத்தில் வரைய நேரிடும்.

எனவே காங்கிரசின் மாபெரும் தலைவரான ஜவகர்லால் நேரு அவர்களின் ஆட்சிக் காலத்திலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையான சுதந்திரத் திராவிட அரசு அமைவதற்கான வழிவகைகளில் கவனஞ் செலுத்த வேண்டுகிறோம்.

நேருவுக்குப் பிறகு யார் என்பதில் நேரு பண்டிதரின் உள்ளத்திலேயே குழப்பமேற்பட்டிருக்கிறதென்பதை அண்மையில் நேரு பண்டிதர் பேச்சே எடுத்துக்காட்டுகிறது. ஜவகர்லால் நேருதான் காங்கிரஸ் கட்சியின் கடைசி ஜனநாயகவாதி ஆனால் அவரது செயலுக்கும் சொல்லுக்கும் காங்கிரசில் மதிப்பு குறைந்து வருகிறது. அவருக்குப் பின் பொறுப்பேற்க வரும் எந்த ஒரு தலைவருக்கும் ஜனநாயகப் பண்பில் நம்பிக்கை இருக்க முடியாதென்பது அவர்களின் இன்றைய நடவடிக்கைகளே எடுத்துக் காட்டுகின்றன.



ஆதலின் இந்திய ஒற்றுமை நிலவ வேண்டுமானால் பூகோள அமைப்பில் இந்தியாஎன்ற துணைக் கண்டத்தில் படம் மிளிரவேண்டுமானால், இந்தியா என்ற சொல் வழக்கில் இருக்கவேண்டுமானால் திராவிட நாடு திராவிடருக்கு ஆக்கப்படவேண்டும். இல்லையேல் இந்தியா என்பது சீர்குலைந்த சித்திரமாக ஆக்கப்படும். இதற்கு முழு குற்றவாளிகள் வடநாட்டு ஏகாதிபத்ய வெறியர்கள்தான் என்று வரலாற்றில் வரையப்படும்.

இந்த மகத்தான கொள்கையை வெற்றியுறச் செய்வதற்காக நாம்

(10-ம் பக்கம் பார்க்க)

# மூவர் உலா!

அரசியல் சந்தையில் எந்த இலட்சியங்களுக்கு அதிக மதிப்பு இருக்கிறதோ, அதே இலட்சியங்களை சிறிதளவு சாயலை மாற்றி, புதிய தத்துவங்கள் எனும் வண்ணங்களை இழைத்து 'வாழ்வெல்லாம் நான் தேடித்திரிந்த கொள்கையின் செயல் திட்டம் இதுவே!' என்று நாட்டிலே தங்களது இதய வேட்கைகளை இரைத்துப் போடும் விசித்திர அரசியல் வாதிகள் தமிழகத்தில் தினமும் பெருத்து வருகிருர்கள் !

அரசியலிலே ஒரு குறிப்பிட்ட இயக்கத்தால் விளைந்த விழிப்புணர்ச்சியை சந்தர்ப்பவாதிகளும், புகழ் பசிக்காரர்களும் எந்த அளவு சீர்குலைத்திருக்கிருர்கள் என்பதற்கு இன்றைய அரசியல் சூழ் நிலையை கவனித்தாலே போதும் !

அத்தனை அரசியல் கட்சிகளிலும் தொட்டு ருசி பார்த்துவிட்டு, 'அங்கே? இங்கே?' என்று அல்லாடித்திரிந்து, எங்கே போவது? என்ற ஏக்கத்திலே போதி மரத்து ஞானேதயம்போல 'நாம் தமிழரே' தான் என்ற உணர்ச்சி பிரவகித்து 'தனக்கென' ஒன்றை நிறுவிக் கொண்ட ஆதித்தனுர் எந்த இயக்கத்திலிருந்து தன் எண்ணங்களை வடித்துக்கொண்டார் என்பதை நாடு அறியும்.

இன்னெரு அரசியல் கட்சியை கவனிப்போம்.

'அரசியல் கட்சி' என்பது தவருே, என்னவோ? 'கலாச்சார ஸ்தாபனம்' என்று கூட சொல்லலாம், 'திராவிடர் இயக்க ஒழிப்பு மாநாடு' என்று மாவட்ட வாரியாக ஒரு கும்பலை சேர்த்து வைத்துக் கொண்டு பேசும் அளவுக்கு இதன் தலைவர் துணிச்சல் காரர்! காமராஜர் உதறித்தள்ளிணுலும் அவர் காலை விடமாட்டேன் என்று வீம்பு செய்யும் அளவுக்கு அரசியல் நடத்தை நாறிப்போன பின்னரும் இவர் தேசியத்தாரோடு ஒட்டுறவு வைத்துக் கொண்டிருக்கிருர், அது என்ன ஒட்டோ— என்ன உறவோ, அரசியலுக்கு இது ஒரு புதிய ரகம் இதைவிட வேறு எப்படித்தான் செல்வது ?

கட்சி என்ருல் கொள்கை வேண்டுமல்லவா ?

இவர் கட்சியில் கொள்கையும் உண்டு.

சுயாட்சி தமிழகம் — உரிமைக்கு வேங்கடம், உறவுக்கு இமயம் இது இந்த இலட்சியத்தின சூத்திரம், ஒன்றுமட்டும் நிச்சயம்; இவர் விரும்புவது 'நாம் தமிழர்' சுதந்திர தமிழ் நாடு அல்ல! அதாவது சுயாட்சி தமிழகம்! எத்தனை சிறிய நூல் இழைவேற்றுமையில் இரண்டு கட்சிகள் எதிர் எதிரே நிற்கின்றன என்பதை கவனித்தால் சுவையாக இருக்கும்.

இவர்கள் 'சங்கடம்' இப்படி இருக்க புதிய தாரகை ஒன்றும் உதயமாயிற்று அரசியல் வானத்திலே.

கட்சியின் பெயர், தமிழ் தேசிய கட்சி.

கொள்கை, தெளிவில்லாத கொள்கைதான்! அதாவது பெரியார் பாணி! இப்போது இருக்கும் கட்சிக் கொள்கைகளின் எந்த அங்கங்களுடனும் ஒவ்வாத, ஒட்டுறவாடாத கொள்கைகள்! ஏதேனும் ஒன்றின் மாதிரி இருந்தால் 'புதிய கட்சி ஏன்? இருக்கும் கட்சிகளில் எதிலாவது சேர்ந்தால் போதுமே!' என்ற கேள்வி பிறந்தால் என்ன செய்வது?

எனவே புதிய கட்சியும் பிறந்தது.

கொள்கையில் ஏதோ ஒரு இடுக்கின் வழி ஒளியும் தெரிந்தது. இந்த ஒளி கூட நாளொரு மேனியும், பொழுதொரு நிறமுமாக 'விதங்களை'க் காட்டினுலும் கொள்கை, கொள்கைதானே !

தன்னுட்சி தமிழகம்: இது இலட்சியமாம்! சூத்திரத்தை கவிஞர் தயாரித்தாலும் தயாரிப்பார்.

சுயாட்சி தமிழகம்.

தன்னுட்சி தமிழகம்

இந்த இரண்டிற்கும் என்னதான் வேற்றுமை? சொல்லில்தான் வேறுபாடு உள்ளதே தவிர பொருளில் இரண்டும் ஒன்றுதானே! சுயாட்சி என்பது வடமொழி கலப்பு; தன்னுட்சி என்பது தூய தமிழ், இந்த சின்னஞ்சிறு இடைவெளிக்காக இரண்டு கட்சிகள், இரண்டு முத்திரைகள், இரண்டு வகை கொடி பிடிப்போர் கூட்டம் இத்தனையும் தமிழக சந்தியிலே சேறும் சகதியுமாக குழம்புகின்றன.

இந்த லட்சணத்திலே 'சுயாட்சி என்பது நான் கறந்த பால் அதிலே

## இரா. இளஞ்சேரன்

நஞ்சை தெளிக்கிருர் சம்பத்' என்று குமுறுகிருர் சிவஞானம்.

சம்பத்தோ, 'இரண்டையும் சேர்த்து விடலாமே!' என்று 'சுருதி பேதம்' காட்டினுர்.

'ஒன்ருவது அறமோ பண்போ அல்ல. கட்சியை துவக்குவதற்கு முன்னுலே என்னிடம் கலந்திருக்க வேண்டும். இப்போது பேசினுல் எப்படி? என்று 'டிரேட்மார்க்கை' விட மறுக்கிருர் ம. பொ. சி,

இடையே இன்னெரு குரல் கேட்கிறது.

இது ஆதித்தனுருக்கே உரித்தான தமிழ் குரல் :

சுயாட்சியாவது! தன்னுட்சியாவது என் சுதந்திர தமிழ்நாடுபோல வருமா? நாடு கிடக்கட்டும்; படை இருக்கிறதா ஐயா படை! தனிப்படை தனி கப்பல், தனிநாடு, எல்லாம் தனித்தனிதான்!''

இதில் வேடிக்கை என்னவென்ருல் மூன்று குழுக்களின் மொத்த வடிவான இலட்சியம் ஒன்றுதான்! வழித்துறைகள், அயல் உலகத் தொடர்புகள், மத்திய ஆட்சியின் பால் கொண்டுள்ள சிறு வேறுபாடுகள் இவை மட்டுமே கிளை பிரிந்து நிற்கின்றன. இன்னும் தெளிவு படுத்த வேண்டுமானுல், வேண்டும் என்றே அவர்களாகவே ஏற்படுத்திக் கொண்ட வேற்றுமைகள் என்றுதான் சொல்லவேண்டும்.

சம்பத்தின் சிந்தனையில் புதிய கட்சி தோற்றம் பெற்றபோது, பிற கட்சிகளிலிருந்து தன் கட்சி வேற்றுமை பெற்று விளங்குவதற்கு எந்த மாறுபாடுகளை இழைத்துக் காட்டினுரோ, அதேபோல ஆசித்தனுரும், ம. பொ. சி.யும் தங்கள் தங்கள் கட்சியிலிருந்து சம்பத்தின் கட்சியை முரண்படுத்தி காட்டுகிருர்கள்.

'சம்பத் பாதி கிணறு தாண்டுகிருர்' என்று நாம் தமிழரும்" நஞ்சை தெளிக்கிருர் என்று சுயாட்சியும் சொல்வதின் சூட்சமம் இது தானே தவிர வேறல்ல!

ஆதித்தனுருக்கும், ம. பொ. சிக்கும் நிச்சயமாக ஒரு உள் நடுக்கம் இருக்கத்தான் வேண்டும்.

இன்னல்களுக்கு ஆளான இலட்சிய வாதிகள் முகாமிலிருந்து, தியாக பரம்பரையால் செழித்த இயக்கத்திலிருந்து சம்பத் வெளி வந்திருக்கிருர். நேற்றுவரை நாடு போற்றும் கட்சியின் முகப்போவியங்களில் ஒன்ருக சம்பத் விளங்கியிருக்கிருர்; மக்களுக்கு அதிக அளவில் அறிமுகம் ஆனவரும் கூட.

இந்த நிலையில் இவர்கள் மூவரும் இணைந்துவிட்டாலோ, ஒரே கொள்கை கோட்டில் நின்ருலோ இயல்பாகவே சம்பத்திற்கு பின்னணியில் ஜொலிப்பு குவிந்துவிடும். அந்த அளவு ம. பொ. சியும், ஆதித்தனுரும் ஏதோ ஒன்றிற்காக கட்சிகளை கண்டவர்கள்! கறையான் புற்றெடுக்க கருநாகம் புகுந்ததைப் போல செல்வாக்கு மிக்க அரசியல் விழிப்புணர்ச்சிகளை தங்களுக்கு சாதகமாக திருப்பிவிட்டுக் கொண்டவர்கள்!

இவர்களது கட்சிகளும். பிறந்த நாள் முதல் இன்று வரை ஒரே வடிவை கொண்டிருப்பதற்கு கூட இரவல் வாங்கிய இலட்சியங்கள் தான் காரணம்.

பேருரு பெற்றுத் திகழும் தி. மு. கழகத்தின் முன்னுல் இந்த மூன்று பிள்ளை விளையாட்டுகள் நிகழ்கின்றன.

இவர்களது எண்ணங்களில் தூய்மை இல்லை ; எனவே, இலட்சியத்திலும் தூய்மை இல்லை.

(7-ம் பக்கம் பார்க்க)



வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் சென்று திரும்பிய சென்னை மாநகராட்சி மன்றத் தலைவர் (மேயர்) வி. முனுசாமி அவர்களை சென்னை விமான நிலையத்தில் கழக முன்னணி வீரர்களும், தோழர்களும் வரவேற்றபோது எடுத்த படம்.

# இலட்சியம் வெல்லும்!

——(ஃ)——

இலக்கியம் புகுந்த இடைச்செரு கல்போல்
இருந்தோர் தொலைந்தார்; வளரும் பயிரிடைக்
களைபோல் வாழ்ந்தோர் காய்ந்தே வீழ்ந்தார்!
கோட்டையில் திரிந்த கோழையர் ஓடினர்;
வேட்டைக் கஞ்சிய வீணர் ஒதுங்கினர்;
நாட்டையே காட்டிக் கொடுக்கும் துரோகிகள்
ஓட்டைச் சட்டியில் பிச்சை பெறட்டும்;
வெந்ததைத் தின்றே விதிவந்து சாகட்டும்;
பந்தைப் போல்பலர் கால்மிதி படட்டும்!
கள்ளிப் பால்பணத் தேசியம் பேசிடும்
சுள்ளிகள் அடிமைச் சுகம் காணட்டும்!
கனவுல கத்தை விட்டு வந்தோர்கள்
புணவுல கத்தில் புரண்டு படுக்கட்டும்!
குயில்மொழி கோட்டான் ஒலியாயிற் றென்றவன்
நரியிடும் ஊளை நாதம் புரியட்டும்!
தென்றல் வீரப் புயல்உருப் பெறுமல்
வாடையாய் மாறியே வஞ்சம் செயட்டும்!
பொய்மை நாடகம் போடட்டும்; எனினும்
மெய்மை விரைவில் வெளிப்படும்! நெடுநாள்
கார்கா லத்தின் காளான் நிலைக்குமா?
வேர்வைத் துளிகள் முத்துக்கள் ஆகுமா?
தேர்தல் சென்றதும் "குடிலர்கள்" எல்லாம்
ஊர்பேர் இழந்தே உலுத்துப் போவார்!
திருவிழா முடிந்த வெறுங்களம் ஆவார்!
உருவிலா தழியும் தேய்நிலா ஆவார்!
எதிரிகள் விளம்பரப் புகழ்ச்சியில் இன்புறும்
உதிரிகள் குப்பைப் பொருள்களாய்ப் போவார்!
உறுதியும் நேர்மையும் உளத்தில் பெருதோர்
இறுதியில் அரசியல் அனாதையாய்ச் சாவார்!
நாமோ,

குருதியில் பூத்த கொள்கை மலர்கள்;
சுருதியில் விடுதலை இசைக்கும் யாழ்கள்;
கிழக்குத் திக்கின் விளக்குச் சுடர்கள்;
வழக்கிரண் டுடைய தமிழ்த்தொகைப் பாடல்கள்;
வடக்கை அடக்கிய செங்குட் டுவன்கள்;
மானங் காக்கும் மருதுபாண் டியர்கள்;
அஞ்சா நெஞ்சன் அழகிரி சாமிகள்;
தியாக பூமியின் கே.வி.கே. சாமிகள்;
திராவிடத் தாயின் வீரப் பிள்ளைகள்!
எனவே,

கடல்மூச் சிருக்கும் வரைக்கும் நமது
உடல்மூச் சிருக்கும்; உரிமை கேட்டும்!
மலைகள் இருக்கும் வரைக்கும் நமது
தோள்கள் இருக்கும்; பகையை நொறுக்கும்!
வானம் இருக்கும் வரைக்கும் நெஞ்சில்
மானம் இருக்கும்; விடுதலை பூக்கும்!
வரலா றிருக்கும் வரைக்கும் அண்ணா
குரலும் இருக்கும்; கொடுமையை அறுக்கும்!
உலகம் இருக்கும் வரைக்கும் நமது
கழகம் இருக்கும்; இலட்சியம் தழைக்குமே!

**மீ. இராசேந்திரன் பி.ஏ.**

## வாழ்க மணமக்கள்

○

சென்னை சட்டக் கல்லூரி மாணவரும், தி. மா. மு. கழகத் தோழருமான தோப்பூர் — திருவேங்கடம் (திரு. தர்மலிங்கம் அவர்களின் குமாரர்) அவர்களுக்கும் ஆரணி பாலகிருட்டிணன் அவர்களின் குமாரத்தியும் வேலூர் நகரக்கழகத் தோழர் மோகன் அவர்களின் சகோதரியுமான தோழியர் கௌசல்யா அவர்கட்கும், 7-7-61 வெள்ளியன்று வேலூரில் திருமண விழா மிகச் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

தி.மு. கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் திருமண விழாவுக்குத்தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்தார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. அவைத்தலைவர் மா. பா. சாரதி எம். எல். ஏ., வே.அ. இளஞ்செழியன், ராதாகிருட்டிணன், மயிலை. முத்தெழிலன், ந. செயராமன், அப்பர்சுந்தரம் எம். ஏ., கணேசன் எம். ஏ., தியாகராசன், என். வி. என. சோமு, இரா. சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மணமக்களுக்கு உற்ருர், உறவினர் சார்பில் வாழ்த்திதழ்களும், அன்பளிப்புகளும பரிசுப் பொருள்களும் வழங்கப்பட்டன.

மணமக்களை வாழ்த்தி பேராசிரியர் மயிலை சிவமுத்து, சட்டக் கல்லூரிப் பேராசிரியர் பழனிசாமி, தி. மா. மு. க. பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம், மாண்மகிமுன் கே. எஸ். தினகரன் ஆகியோரும் இன்னும் பலரும்வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்

8-ம் பக்கத் தொடர்ச்சி

நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறோம்.

குறிப்பாக 1949-ம் ஆண்டிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக அமைப்பின் வாயிலாக தீவிரப்பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

1951—முதல் பொது மாநாடு—சென்னை மாநகரில்!


1956— 2வது பொது மாநாடு—திருச்சித் தலைநகரில்!

1961 — மூன்ருவது பொது மாநாடு மதுரையம்பதி திருப்பரங்குன்றத்தில்!

இம்மூன்று மாநாடுகளுக்கும் இடையே கழகம் அடைந்துள்ள வளர்ச்சி அரசியல் வரலாற்றில் ஒப்புவமையற்றதாகும்.

எனவே நம் சொள்கையில் வெற்றியுறுவோம் என்ற முழு நம்பிக்கை அட்டிமூக்கற்று உருவாகி வருகிறது!

அந்த நம்பிக்கையை நிறைவேற்ற நமக்குப் பெருந்துணையாய்



வழிகாட்டியாய் இருப்பவர் அறிஞர் அண்ணா அவர்கள்!

ஆட்சியாளரின் அடக்குமுறைக் கொடுமையால் மாற்ருரின் கொடுமைக்காளாகி துரோகிகளின் இழிச்செயலால் கழகக் கொள்கை துவண்டுவிடாது என்பதை நாம் கடந்த இரு திங்களாகக் கண்டு வருகிறோம்.

நாட்டின் தலைவன் நமது குடும்பத்து அண்ணன் அவர்களது தூய்மையான தொண்டே இத்தகு சக்தியை நமக்கு அளித்து வருகிறது.

நமக்கு ஒளிகாட்டி உணர்ச்சியூட்டி, ஆர்வமூட்டி எழுச்சியூட்டியவர் நமது அண்ணாதான். நமது கழகத்தின் ஆணிவேராக விளங்குபவர் நமது அண்ணாதான்.

## ஏஜெண்டுத் தோழர்கட்கு

•

வணக்கம்.

ஜுன் மாதம் முடிய படிட்டியல் தொகை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கான நிலுவைத்தொகையை உடன் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—நிர்வாகி. திராவிடன்

திராவிடநாடு திராவிடருக்கே—இந்த உரிமையைப் பறித்துவிட ஆளும்வர்க்கத்தினர் செய்துவரும் பித்தலாட்டங்கள் ஏராளம்! கழகத்தைக் காட்டிக்கொடுத்து உல்லாச வாழ்வு வாழலாம் என்ற இழிகுணம் படைத்த அற்பர்களின் துணைகொண்டு கழகத்தைச் சீர்குலைத்துவிடலாம் என்று ஆளும் கட்சியினர் மனக்கோட்டை கட்டுகின்றனர். அவர்களின் இந்த எண்ணம் மண்ணோடு மண்ணாய் அழியப்போவது உறுதி?

மாளிகை வாசிகளிடம் சிக்கியிருந்த திராவிட இயக்கத்தை மக்கள் சக்தியாக ஆக்கித்தந்த நமது அண்ணா அவர்களின் பொதுப் பணியினை திராவிடத்தின் மானங் காத்த மனிதகுல மேதையின் சீரிய தொண்டினை வழிகாட்டியாகக் கொள்வோம்.

உடன்பிறந்த அண்ணன்மார்மார்களைவிட நமது அறிஞர் அண்ணா அவர்களிடம் நாம் கொண்டுள்ள பாசமும் பயமும் எண்ணுந்தோறும் கண்ணீர் மல்கச் செய்கிறது.

அந்தக் கண்ணீர்த் துளிகள் இதுவரை சாதித்த சாதனைகள் ஏராளம்! இனி சாதிக்கயிருப்பது நம் தாயகத்தை வடவர் பிடியிலிருந்து விடுவிடுக்கும் இறுதிப் போர்!

போர்முரசுகொட்ட— புதுவாழ்வு பெற நம் குடும்பத்து அண்ணனின் தலைமையில் அணிவகுப்போம் வாரீர் மதுரையம்பதியை நோக்கி!

என். வி. நடராசன்


**20-8-61 ஞாயிறு மாலை 6 மணிக்கு**
**சென்னை செயின்ட் மேரிஸ் ஹாலில்**

காமெடியன் **டி. எம். பி. கிருஷ்ணராஜ்** குழுவினரின்

**"நாடகம்"**

என்னும் சமூக நாடகம் நடைபெறும்.

கதை-வசனம்: **அரியலூர் ஏ. நெடுமாறன்**

# பம்பாயில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவுக் கூட்டம்

—(*)—

## பம்பாய் தி. மு. க. நடத்திய சிறப்புமிகு நிகழ்ச்சி

இலங்கைத் தமிழர் அறப்போருக்கு ஆதரவாக பம்பாய் மாநில திராவிட முன்னேற்றக் கழகம் 20—6—61 செவ்வாய்க்கிழமையன்று கண்டன ஊர்வலம் நடத்திற்று. கண்டன ஊர்வலத்தின் முடிவில் இலங்கை வர்த்தகத் தூதுவரிடம் மனு ஒன்றைச் சமர்ப்பித்தது. தாயகத்திலிருந்து கண்டன நாள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வந்திருந்த திரு கே. ராசாராம் பி. ஏ, அவர்கள் தலைமையில் பம்பாய் மாநில தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. புத்தரசு அவர்களும், அவைத் தலைவர் மதுரை வேலன் அவர்களும் துணை செயலாளர் வி. தேவதாசன் அவர்களும் தோழர் எஸ். தியரகராசன் அவர்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஊர்வலத்தை மிகச் சிறப்பாக நடத்திச் சென்றனர். ஊர்வலத்தில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட தோழர்கள் சிங்கள வெறியைக்கண்டித்து 'இலங்கைத் தமிழர் அறப்போர் வெல்க' 'இலங்கை அரசே இரக்கமற்ற அடக்குமுறையைத் திரும்பப் பெறு' 'அறவழி நடப்பீர். அடக்குமுறையைக் கைவிடுவீர்' என்பன போன்ற முழக்கங்களையும் 'அறிஞர் அண்ணா வாழ்க' 'திராவிட நாடு திராவிடருக்கே என்பன போன்ற வாழ்த்தொலிகளையும் ஆங்கிலம் தமிழ் ஆகிய மொழிகளில் முழங்கிக் கொண்டே சென்றனர்.

ஆசாத் திடலிலிருந்து பிற்பகல் 1-30 மணிக்கு புறப்பட்ட ஊர்வலம், கர்னக்ரோடு, பல்டன் ரோடு, தாதாபாய் நவ்ரோஜ் ரோடு, கள் வழியாக சுமார் மூன்றரை மைல்களைக் கடந்து புளோரா பவுண்டனை வந்தடைந்தது. வழியெங்கும் பாதையின் இருமருங்கிலும் பல்லாயிரக்கணக்கான வட இந்திய ஆண்களும் பெண்களும் குழுமி நின்று நூற்றுக்கணக்கான இருவர்ணக் கொடிகள் அலையலையாக அசைந்துவர கழகத் தோழர்கள் இலங்கைத்தமிழர்கள் அடக்குமுறை செய்யப்படுவதைக் கண்டித்து எழுதப்பட்டுள்ள அட்டைகளைத் தாங்கி வருவதையும் கண்டனர்.

ஊர்வலம் புளோரா பவுண்டன் வந்ததும், தலைவரின் ஆலோசனைப்படி போலீசார் போக்குவரத்துப் பாதிக்கப்படாவண்ணம், சாலையின் நடுவில் விடப்பட்டுள்ள பெரும் வட்டப்பகுதியுள் ஊர்வலம் நிற்க ஏற்பாடு செய்து தந்தனர். பின்னர் இலங்கை வர்த்தகத் தூதுவராலயத்தினுள் சென்று ஊர்வலத்திற்கு தலைமை வகித்த கே; இராசாராம் அவர்கள் கோரிக்கை மனு ஒன்றை தூதுவர் திரு எ. எம். ஜெயசின்கா அவர்களிடம் அளித்தார்கள். தலைவர் திரு. கே. இராசாராம் அவர்களுடன் பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் புத்தரசு, அவைத்தலைவர் வேலன், துணைச் செயலாளர் வி. தேவதாசன். தோழர் எஸ், தியாகராசன் ஆகியோர் மனுவைக் கொடுக்கும்போது உடனிருந்தனர்.

இலங்கைத் தூதுவர், இலங்கை அரசு வெளியிட்டுள்ள மொழிக் கொள்கை பற்றிய புத்தகங்களை அளித்தபின், தமிழ் நாட்டிலிருந்து சென்றுவந்த திரு. பி. ராமமூர்த்தி அவர்களின் அறிக்கையைப் பார்த்தீர்களா? எனக்கேட்டார். அதற்கு இராசாராம் அவர்கள், ராமமூர்த்தி அவர்களின் அறிக்கைபற்றி கட்சி சார்பற்ற ஆங்கிலச் செய்தித்தாளான 'மெயில்' பத்திரிகை அவரை, இந்தியாவைப்பற்றி மிக மட்டரகமாய் எழுதிய மேயோவுக்கு ஒப்பிட்டு ஒரு துணைத் தலையங்கம் எழுதியுள்ளதைச் சுட்டிக் காட்டினார்கள். மேலும், இன்னும் இலங்கைத் தமிழ் தலைவர்களை விடுதலை செய்யப்படாதிருப்பதையும் எடுத்துக்கூறினார்கள். பின்பு இலங்கைத் தூதுவர் கொடுக்கப்பட்ட மனுவை இலங்கைப் பிரதம மந்திரிக்கு அனுப்புவதாக கூறினார்கள்.

பின்னர் தலைவர் ஊர்வலத்தை அருகிலிருந்த ஓவல் திடலுக்கு அழைத்துச் சென்றார் ஊர்வலத்தில் கலந்துகொண்ட தோழர்கள் மிக்கக் கட்டுப்பாடுடனும், கண்ணியத்துடனும் நடந்துகொண்டதைப் பாராட்டியும் இலங்கைத் தூதுவருடன் நடந்த உரையாடல் பற்றியும் பம்பாய் தி. மு. க. பொதுச் செயலாளர் புத்தரசு அவர்களும், தலைவர் திரு; இராசாராம் அவர்களும் சிறிது நேரம் உரையாற்றினார்கள். பின்னர் அனைவரும் அமைதியுடன் கலைந்து சென்றனர். ஊர்வலத்தின் கூடவே ஏராளமான இரும்புத் தொப்பியணிந்த போலீசாரும், போலீஸ் அதிகாரிகள் பலரும், ஒயர்லஸ் வேன்கள் சிலவும் வந்தபோதிலும். போலீசாரே பாராட்டுமளவில் ஊர்வலம் மிகச் சிறப்புடன் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

ஃ

பம்பாய் மாநில திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் 20-6-61 அன்று செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் தாராவி வ. உ. சி. திடலில் இலங்கை தமிழர் உரிமை அடக்குமுறைக் கண்டனப்பொதுக் கூட்டம் நடைபெற்றது துணைச் செயலாளர் வி. தேவதாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசி பொதுச்செயலாளர் புத்தரசு அவர்களைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொண்டார்.

தலைவர் உரைக்குப் பின் பிற்பகல் நடந்த ஊர்வலச் சிறப்புப் பற்றியும், இலங்கைத் தமிழர்களின் இன்னல்கள் பற்றியும், தோழர்கள் அன்புச்செழியன், வீணை சோமு ஆகியோர் தமிழிலும் தோழர் கேரளீயன் மலையாளத்திலும் பேசினர்.

கண்டனத் தீர்மானங்கள் தலைவர் அவர்களால் படித்துக் காட்டப்பட்ட பின் தீர்மானங்களை வழிமொழிந்து தோழர் எஸ். தியாகராசன் பேசினார். பின்னர் கண்டன நாள்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள வந்திருந்த கே. இராசாராம் பி. எ. அவர்களுக்கு பம்பாயிலுள்ள அத்தனை கிளைக்கழகங்கள் சார்பு மன்றங்கள், படிப்பகங்கள், தொழிற் சங்கங்கள் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டது. பின்னர் க. இராசாராம் பி. எ. அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றியும் திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளை விளக்கியும் நீண்ட நேரம் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச் செயலாளர் வி. தேவதாசன் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது கலைந்தது. கூட்டத்தில்உண்டியல் மூலம் ஆயிரத்து நூற்றி நாலு (1104) புதுக்காசுகள் தேர்தல் நிதியாக வசூலிக்கப்பட்டது. கொட்டும் மழையிலும் பொதுமக்கள் கலைபாமல் கூடியிருந்து கொள்கை விளக்கம் கேட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுக்கூட்டத்திற்குப் பின்னர் சுமார் 1-30 மணியளவில் தாராவி திராவிடரகத்தில் நடைபெற்ற பம்பாய் தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டத்திலும் திரு. இராசாராம் அவர்கள் கலந்துகொண்டு, காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கொள்கை பரப்புவோர் கூட்டத்தின் செய்திகளை எடுத்துரைத்தார்கள்.

ஃ

கடந்த 20—6—61ம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 7 மணியளவில் பம்பாய் தாராவி வ.உ.சி. திடலில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் உரிமை அடக்குமுறைக் கண்டனம் பொதுக்கூட்டத்திற்கு தலைமை வகித்து பம்பாய் தி. மு. க. பொதுச்செயலாளர் புத்தரசு அவர்கள்தி பேத்திய அகதிகட்குக் குடியேற்ற வசதிகள் செய்து தருவதில் பெரும் அக்கறை எடுத்துக் கொள்ளும் டில்லிப் பேரரசு; நாடற்ற நிலையில், அவதிகட்கு ஆளாகி இலங்கையினின்றும் வெளியேற்றப்பட்டு வரும் தமிழர்கட்கு பாதுகாப்பு அளிக்க மேலும் அவர் கூறியதாவது :

இலங்கை அரசின் தலைமைப் பதவி ஒரு பெண்ணுக்குக்கிடைத்த போது மகிழ்ந்து பாராட்டியவர்கள் நாம். ஆனால் பெண்ணைத் தலைமையாய் கொண்ட அரசாங்கமே இலங்கையில் பெண்களின் கற்புக் குலைவதற்கும்காரணமாயினவெறிச் செயல்களைப் புரிந்துள்ளது என அறியும்போது நாம் நிச்சயம் கண்டிக்க வேண்டியவர்களாகிறோம். இலங்கையினை வளப்படுத்திப் பண்படுத்திய தமிழர்களைக் கொடுமை செய்தும், தமிழுக்குத் தரவேண்டிய தகுதியினை அளிக்க மறுப்பதும் சிறுபான்மையினரை நசுக்க எண்ணும் ஆதிக்க வெறியென்பதைத் தவிற வேறல்ல. இதனை நன்கு அறிந்திருந்தும், வெளி நாட்டுப் பிரச்சினைகளிலெல்லாம் தலையிட்டு வரட்டுக் கவுரம் பெற்று வரும் நேருவும். அவர்தம்அமைச்சரவையும், 'அது இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை' எனக் கூறித் தட்டிக் கழிப்பது, அது தமிழர்களின் குறிப்பாக தென்னவர்களின் பிரச்சினைஎன்பதால் எழுந்த அலட்சிய எண்ணத்தைத்தான் காட்டுகிறது. இலங்கையினின்றும் நடைபெற்ற நிலையில் அகதிகளாய் ஓடிவரும் தமிழர்களுக்கு எந்த விதப் பாதுகாப்பும் தர எண்ணமே அற்ற இந்திய அரசு வடபுலத்தினின்றும் திபத்திலிருந்து வரும் அகதிகட்கு பாதுகாப்பளிப்பதோடு அவர்களை தென்னாட்டிலே குடியேற்றவும் ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இச்செயல் தென்னகத்தை வடவர் அடிமைகொள்ள முனையும் முயற்சியே என எவரும் எளிதில் அறியலாம். இன்று நடைபெற்ற நமது ஊர்வலம் வடஇந்திய மக்கட்கு நமது எழுச்சியினை ஓரளவு எடுத்துக்காட்டியிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)





**வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி**

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசை யில்லாமல், இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும், கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம். 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம், விலை ரூ. 5—00. வி. பி. செலவு ரூ. 1—25.

**தையற்கலை**

இதன் மூலம் யார் வேண்டுமானாலும் பிறர் உதவியில்லாமல், தானே தையல் வேலையைச் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். மேலும் இதில் துணிகள் அளவு வெட்டி தைப்பதற்கான தனித்தனி படங்களும் விளக்கமான முறையில் இருக்கின்றன.

விலை : ரூ. 3—00 தபால் செலவு ரூ. 1—00

**ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)**

இதில் சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகு வர்த்தி, ஸ்னோ, பேஸ் பௌடர், சாம்பிராணி, பெனாயில் போன்ற 200 கைத்தொழில் கொண்டது. விலை: ரூ. 3—00, வி. பி. செலவு ரூ. 1—00.

**குடும்ப இலகு வைத்தியம்**

வீட்டுச் சரக்குகளைக் கொண்டு நோய்களைப் போக்கிக் கொள்ளும் ஏராளமான வைத்திய முறைகளடங்கியது தபால் செலவுடன் ரூ. 3—50.

VANI BOOK DEPOT,

3, மலையப் பெருமாள் தெ [illegible] No. 239, Madras-1.

# யாரை ஏமாற்றவோ?

[ச. வெ. பாண்டியன்]

"மூன்ருவது ஐந்தாண்டுத்திட்ட இறுதி நகலில் "தமிழ் நாடு" திட்டத்தின் முக்கியமான திட்டம் எதுவும் கைவிடப்படவில்லை" என்று கனம் நிதியமைச்சர் 'சுப்பிரமணியம்' அவர்கள் பேசியுள்ளார்கள். அதுவும் மூன்ருவது ஐந்தாண்டு திட்டத்தைத் தயாரித்து இறுதிப்படுத்த "திட்டக்குழு" அமைத்த இறுதிக் கூட்டத்திலே கலத்து திரும்பிவந்த பின்புதான் கூறுகிருர் இப்படி.

"திட்டங்கள் எதுவும் கைவிடப்படவில்லை" என்கிருர். அவரது பேச்சிலே உறுதி இருக்கிறது—உதாரம் தெரிகிறது. உண்மை என்பது போல்தான் நமக்கும் வருகிறது. ஆனுல் நடைமுறையில் காண்பது என்ன?

முக்கிய திட்டங்கள் யாவை? முதலாவது, இரண்டாவது திட்ட காலங்களில் பல அரசியல் கட்சிகளாலும், வணிக சங்கங்களாலும் மற்றும் பல்வேறுபட்டவர்களாலும் அவ்வப்போது மிகவாக வலியுறுத்திப் பேசப்பட்ட திட்டங்களையெல்லாம் நாம் முக்கிய திட்டங்கள் எனக் கொள்ளலாம். அப்படிப் பார்க்கும்போது கீழ்க்கண்ட திட்டங்கள்தான் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் முக்கியமானவைகளாகக் கருதப்படக் கூடியனவாகும் :-

1. சேது சமுத்திரத்திட்டம்,
2. தூத்துக்குடி — ஆழ்கடல் திட்டம்.
3. புதிய ரயில் பாதை போடுதல்.
4. அணு மின்சாரத் திட்டம்.
5. உருக்கு ஆலைத்திட்டம்,
6. அலுமினியத் தொழிற்சாலை.
7. கனரக மின்சாரக் கருவித் தொழிற்சாலை.

குறிப்பாகக் கூறப்பட்ட இந்த ஏழு திட்டங்களில் எல்லாமே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டனவா? இல்லை!

கனம் நிதியமைச்சர் அவர்கள் வரும் தேர்தலை நினைத்துத்தான் இப்படிப் பச்சைப் பொய் பேசுகிருரே தவிர உண்மையில் மேற்கண்ட திட்டங்களில் எதுவும் முழு அளவோடு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

சேது சமுத்திரத் திட்டம் நிச்சயமாக இல்லை என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது. சமீபத்தில் மத்திய அரசின் போக்கு வரத்துத் துறை அமைச்சர் "டாக்டர் பி. சுப்பராயன்" அவர்கள் விருதுநகர் வணிகர் சங்கத்திற்கு எழுதிய தனி மடலில் "மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுவிட்டன; தற்போது மூன்ரும் திட்ட உருவாக்க வேலைகள் முடிவடைந்துவிட்டன. ஆதலால் மூன்ரும் திட்டத்தில் சேது சமுத்திரத் திட்டத்தைச் சேர்ப்பது இயலாத காரியம்" என்று எழுதியுள்ளார்.

சேது சமுத்திரத் திட்டம் இல்லை என்பது இம்மடல் மூலம் தெள்ளெனத் தெரிகிறது. ஆனுல் திட்டக்குழு சென்று திரும்பிய நமது தமிழக அமைச்சர் "சுப்பிரமணியம் அவர்கள்" "சேது சமுத்திரத் திட்டம் பற்றி நிபுணர் குழு அனுப்பிய அறிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. அந்தத் திட்டம் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது" என்று பேசியிருக்கிருர்!

மத்திய அமைச்சர் அதுவும் தமிழகத்திலிருந்து சென்றவர் "சேது சமுத்திரத் திட்டம் இல்லை" என்று கூறுகிருர். நமது மதி அமைச்சரோ இல்லை உண்டு என்கிருர்! இந்த இருவர் கூற்றில் யாரை நாம் நம்புவது? "கனம் சுப்பிரமணியம்" யாரை ஏமாற்றுவதற்கு இப்படிப் பொய் பேச வேண்டுமோ தெரியவில்லை?

அடுத்தபடியாகத் தூத்துக்குடித் திட்டம்! 1956-ல் "டாக்டர் ஏ. ராமசாமி (முதலியார்)" தலைமையில் ஒரு குழுவும், பின்னர் "டேவிஸ்" தலைமையில் ஒரு குழுவும் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து இத்திட்டத்தால் ஏற்படும் லாபத்தை எடுத்துக்காட்டியும் மலையைக் கில்லி எலியைப் பிடித்ததுபோல 5 கோடி ரூபாய் மாத்திரம் ஒதுக்கியிருக்கிறது டில்லி! இது வடவர்களின் வஞ்சகத்தைக் காட்டுகிறதே தவிர வேறு என்ன?

"மூன்ருவது திட்டத்தில் புதிய ரயில்பாதைகள் போடும் திட்டம் தென்னகத்தைப் பொறுத்தவரையில் எதுவும் இல்லை என்று. திட்டக் குழு தீர்மானித்துவிட்டது. "மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்போது சேர்க்கப்பட்டுள்ள புதிய ரயில் பாதைகளில் எதுவும் தென்னகத்தில் இருக்காது" என்பதாக இரயில்வேக்குழு உறுப்பினர் 'திரு. கிருபால்சிங்கர்' அவர்கள் கூறிவிட்டார்கள்.

நமது நிதியமைச்சர் அவர்களோ "சேலம்—பெங்களூர் ரயில்பாதையும், ஹாலன் — மங்களூர் ரயில் பாதையும் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது" என்பதாகக் கூறியுள்ளார்கள்?

யாரை ஏமாற்ற இந்தப் போலி வார்த்தை என்பது நமக்கு விளங்கவில்லை? 3-ம் திட்டத்தில் ரயில்வேக்கு மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ள தொகைமாத்திரம் ரூ. 1275 கோடியாகும். இதில் ரூ. 120 கோடிக்கு மொத்தம் 1100 மைல் நீளம் புதிய ரயில் பாதைகள் போட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசினர் 11 திட்டங்களைக் காட்டி திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி கூறினர். ஆனுல் அவ்வளவு திட்டத்தையும் அப்படியே தள்ளிவிட்டது டில்லி. நிதியமைச்சரோ குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்று பேசுவதுபோலப் பேசுகிருர்,

அணு மின்சாரத் திட்டத்திற்கும் அதோகதிதான்! ஏற்கனவே தொழில் பெருகாததற்குக் காரணம் மின்சாரப் பற்ருக்குறையால்தான். காங்கிரஸ் பேச்சாளர்களில் பலர் எல்லா ஆறுகளுக்கும் அணைகட்டிவிட்டோம்; மின்சாரம் எடுத்துவிட்டோம் இனி எம். ஜி. ஆருக்கும், எஸ். எஸ். ஆருக்கும், கே. ஆர். ஆருக்கும்தான் அணைகட்ட வேண்டும் என்று பெருமையாகப் பேசுவார்கள். அப்படி அணைகட்டி மின்சாரம் எடுத்தும்கூட "மின்சார வெட்டு" வந்துவிடத்தான் செய்கிறது.

இதை நீக்க ஒரே வழி அணுசக்தி மின்சாரம் அமைத்தலேயாகும். அதுவம் தமிழகத்திற்கு இல்லை என்ருகிவிட்டது. இனி தொழில் பெருக வாய்ப்பில்லை அவ்வளவுதான். நிலைமை இவ்வாறு இருக்க கனம். நிதியமைச்சர் அவர்கள் "சென்னை அணு மின்சார நிலையம் ஏற்படுத்த அவசரப்பட வேண்டியதில்லை." என்று சமாதானம் கூறுகிருர்.

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பது பழமொழி, நமது அமைச்சருக்கு அது எங்கே தெரியப்போகிறது. தங்களால் பெற்று வர முடியவில்லை—வாதாடும் திறமையில்லை அல்லது வடக்கு வஞ்சிக்கிறது என்ருவதுகூறும் திராணி நமது அமைச்சர்களுக்கு இல்லை. இல்லாவிட்டால் அவசரப்படத் தேவையில்லை என்று 'ஞானுபதேசம்' புரிவாரா?

சேலம் சேர்வராயன் மலைத் தொடரில் இருக்கும் அலுமினியத் தாதுவைப் பயன்படுத்தி அலுமினியம் தயாரிக்கும் திட்டம் குப்பைத் தொட்டியிலே சேர்ந்துவிட்டது போலும். வெளியார் கம்பெனி ஒன்றுடன் சேர்ந்து தொழிற்சாலை அமைக்கப்பட விருப்பதாகக் கூறினுர்கள்! இப்போது அந்தப் பேச்சையே காணவில்லை.

உருக்குத் தொழிற்சாலை அமைக்க தனிப்பட்டவர் ஒருவருக்கு ரூ. 325 கோடி செலவில் ஆரம்பிக்க அனுமதி கொடுத்தாகிவிட்டது என்று சின்னுட்களுக்கு முன் செய்தி கிடைத்தது. செய்தி இன்னும் செய்தியாகவேதான் இருக்கிறதே தவிர நிலைமை என்ன என்பது இன்றும் புரியவில்லை.

இதோ கனரக மின்சாரக் கருவிகள் உண்டாக்கும் தொழிற்சாலை என்ருர்கள். எங்கே என்று பார்த்தால் கனம் சஞ்சீவய்யா அவர்கள் அது 'ஆந்திரத்திற்குத்'தான்' என்று கூறுகிருர்! தமிழகத்திற்கு அதுவும் இல்லை என்ருகிவிட்டது!

எல்லாத்திட்டங்களுமே 'இல்லை' என்ற நிலையில்தான் இருக்கின்றன. ஆனுல் நமது நிதியமைச்சர் அவர்கள் முந்திய திட்டங்கள் எல்லாமே அமுலாகப் போகின்றன" என்று நமக்கு உற்சாகம் தருகிருர்! ஆனுல் உண்மையைப் பார்க்கும்போது உற்சாகம் வேதனையாகிறது!

நன்ருச் சிந்தித்துப் பார்த்தால் "சுப்பிரமணியனுரின்" தடம்புரண்ட பேச்சுக்கு "தேர்தல்" தான் காரணம் என்று நமக்குப் புரிகிறது. "திட்டம் எல்லாம் வடக்கே" என்று பொது மக்களுக்குத் தெரிந்தால் எங்கு தி. மு. க.விற்கு அதிக வாக்குகள் விழுந்துவிடுமோ என்ற பயத்தில்தான் இப்படி வடக்கு வஞ்சிக்கவில்லை என்று பொது மக்கள் நம்புவதற்காக பொய்யும்—குறையும் பேசி வருகிருரே தவிர வேறு இல்லை!

பொதுமக்களே கவனப் படுத்திக் கொள்ளுங்கள்! தேர்தல் வருகிறது! பொய்யர்களுக்குப் பாடம் புகட்டுங்கள்!

## தி. மு. கழக 3-வது பொது மாநாடு

**1961 ஜூலை 13, 14, 15, 16 மதுரை - திருப்பரங்குன்றம்**

தலைவர்: **அறிஞர் அண்ணு**

திறப்பாளர்: **கே. ஏ. மதியழகன்**

கண்காட்சித் திறப்பாளர்: **டாக்டர். சத்தியவாணிமுத்து** எம்.எல்.ஏ.,

பொருளாளர்: **மு. கருணுநிதி** எம்.எல்.ஏ.

வரவேற்புக்குழுத் தலைவர்: **எஸ். முத்து**

தொண்டர் படைத் தலைவர்கள் :-
சி. காதற்கனி, பா. சீனி

செயலாளர்கள் :
அம்பில் தர்மலிங்கம், தா. ஆவுடையப்பன், பி. எஸ். மணியம்.

# உறுதியுடன் உழைப்போம்! உரிமையைப் பெறுவோம்!

தி. மு கழகத்தின் முதல் மாநில மாநாடு 1951 டிசம்பர் 13, 14, 15, 16 நாட்களில் சென்னையில் நடைபெற்றது. இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குழுமியிருந்தனர். மாநாட்டுக்குக் கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களைத் தலைமை தாங்கி நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டு முன்னணி வீரர்கள் பலர் உரையாற்றினர். இறுதியாக வரவேற்புக் குழுத் தலைவர் என். வி. நடராசன் அவர்கள் அண்ணா அவர்களுக்கு மாலையணிவித்து தலைமை தாங்கும்படி அழைத்ததும் அண்ணா அவர்கள் கண்ணீர் மல்க, நெஞ்சுருக "கண்ணீர்த்துளிகளே! நாட்டின் கண்மணிகளே!" என்றழைத்து உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினர். இயக்கம் வளர்ந்து — பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அண்ணா தலைமையேற்கும் இந்த சந்தர்ப்பத்தில் 1951ல் அண்ணா தீட்டிய வீர காவியத்தின் சில பகுதிகளை வாசகர்களுக்கு அளிப்பதில் பெருமைப்படுகிறோம். (ஆ—ர்)

## கண்ணீர்த் துளிகளே; கண்மணிகளே; காணிக்கை தாருங்கள்!

### முதல் மாநில மாநாட்டில் அண்ணா தீட்டிய வீர காவியம்!

ஆர்வமிக்க வரவேற்புக் கழகத் தலைவரவர்களே! மாநாட்டுப் பிரதிநிதிகளே! கழகத் தோழர்களே! நீங்கள் என்னிடம் காட்டிய அன்புக்கு வணக்கம் செலுத்துகிறேன். திராவிடநாடு பற்றிய ஐயப்பாடு கழகத்திலுள்ளோருக்கும் சரி, மாற்றுக் கட்சியிருக்கும் இனி இருக்காது என நினைக்கிறேன். என்னைத் தலைமைப் பீடத்திற்கு அழைத்து வழிமொழி கூறியவர்களிலொருவர் கடமையைச் செய்கிறோம்; கட்டளையிடுங்கள் என்றார், அருமை தோழர்களே! நான் கட்டளையிடுபவனல்ல! கட்டளையிட்டு காரியத்தைச் சாதிக்கக்கூடியவனல்ல கட்டளையிடும் சிலரைப் போல செல்வத்திலும் உயர் ஜாதியிலும் பிறந்தவனல்ல. ஆனால் நம் 'தம்பிமார்கள்' கொண்டிருக்கிற அளவற்ற ஆர்வம், அறிவு, திறமை ,இவற்றிலேயே நம்பிக்கைக் கொண்டுதான் பணி புரிய உங்களை அன்புடன் அழைக்கிறேன். என்னிடம் இதற்கு முன் நம்பிக்கையைக் காட்டியவர்களின் உழைப்பின் ஆதாரத்தில் தான் செயல்பட வருகிறேன். ஜனநாயகத்தில் நான் அதிகம் நம்பிக்கைக் கொண்டவன், தங்களின் கருத்துக்களைக் கேட்டு, என் கருத்துக்களைக் கூறி, அதிலிருந்து முடிவெடுத்தே செயலாற்றிவருகிறேன். நாம் இந்த அளவுக்கு வளர்ந்திருப்பதற்குக் காரணம் சர். தியாகராயர் அளித்த எழுச்சி அவர் தந்த பிச்சை, இன்னும் நாயர், பெரியார் ஆகியோர் நல்வார்த்தை நமக்குத் தந்திராவிடில் நாம் இந்நிலைக்கு வந்திருக்க முடியாது.

இந்த நாட்டிலேயே சிந்தித்து திட்டமிட்டு செயல்படும் எந்த முற்போக்குக் கட்சியாயினும் அத்துடன் நட்புடன் வேலை செய்ய நான் தயார், பொதுவுடமை கட்சி, சமதர்மக் கட்சி என்ற எந்தப் பெயரையும் கண்டு அஞ்சிவிட மாட்டேன். ஆனால் அக்கட்சிகளின் பெயர்களுக்கு முன்னால் 'திராவிடம்' என்றிருந்தால் அந்தக் கட்சியின் முதல் அங்கத்தினன் நான்,

"பல பகுதிகளிலுமிருந்து வந்திருக்கிறீர்கள், இதைச் சுற்றிலும் அமைக்கப்பட்டுள்ளன எல்லா சிற்றூர் பேரூர் கழகக் கொடிகள் இதைக் கண்டு என்மனம் பூரிப்படைகின்றது. பம்பாய், இலங்கை, ரங்கூன் ஆகிய தொலைவிலிருந்தெல்லாம் வந்துள்ள கழகக் கொடிகள் இங்கே பறக்கின்றன. கழகத்தின் பணி ஏற்க எல்லா கட்சியிலுமுள்ள திராவிடத் தோழர்களையும் அழைக்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி ஜீவானந்தம் உள்பட. அவர்கள் வந்து இங்கு மிச்சம் மீதியிருக்கும் முதலாளித்வத்தையும் அறவே அழிக்கட்டும். ஆனால் அதற்கு ஓர் எல்லை மட்டும் கூறுகிறேன். ஆம் தொல்லை தராத எல்லை! அதுவே திராவிடம்!


கடல் கடந்த திராவிட மக்கள் இன்பத் திராவிடம் எப்போதேற்படும். அங்கே எப்போது போவோமென்று ஏங்கிக் கிடக்கின்றனர். அவர்களது நம்பிக்கைக்கு இயன்ற வரை பாடுபடுவோமென உறுதி கூறுகிறேன்.

திராவிடத்தைப் புதிதாய் நாம் கேட்கவில்லை. நம் மூதாதையர்கள் வழிவழிபாக தந்திருக்கும் இலக்கியச் செல்வங்களைக் காட்டி கேட்கிறோம். இது வீர விளையாட்டுகள் புரியும் மைதானம். அதோடு அ. இ. முஸ்லீம்லீக் பாகிஸ்தான பெறுவதற்காகக் கூடிய இடம், பொருத்தமான இடம் பொருத்தமான நேரம் பொருத்தமானநாட்டையே கேட்கிறோம். இன்று நம்மை எதிர்ப்பவர் தொகை குறைகிறது. ஆதரிப்பவர் 'தொகை அதிகரிக்கிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கூட்டமொன்றில் கோபால் ரெட்டி மத்திய சர்க்காரால் மாகாண சர்க்கார் படும் அவஸ்தையை உள்ளக் குமுறலால் வெளிப்படுத்தியுள்ளார் அவர் மாகாண சர்க்காரின் இந்த யதேச்சாதிகாரத்தை முன்வைத்து தேர்தலில் போட்டி யிட்டிருக்க வேண்டும். ஆனால் அதைச்செய்ய வில்லை.

நேரு சர்க்கார் முதலாளித்வ சர்க்காராகி விட்டது. முதலாளிகளின் பின்னாலோடும் பிள்ளையாகி விட்டார் நேரு; தேசிய மயத்தைக் கைவிட்டுவிட்டது நேரு சர்க்கார். அமெரிக்காவின் பின்னால் ஓடுகிறது இந்த சர்க்காரின் மீது குற்றம் சாட்டுகிறேன். ஆளும் திறமையற்றது நேரு சர்க்கார் என்று.

நேரு ரொம்பப் பெரிய மனிதர். பெரிய மனிதராக ஆக்கப்பட்டவர். ஆனால் அவரோ தேசிய மயத்திற்த நிபுணர்களில்லை என்கிறார். எங்கே சென்றுவிட்டனர் ஆர். கே. சண்முகம், ஜி. டி. நாயுடு, டி. வி. எஸ். முதலாளிகள்? அவர்களிடம் பெரிய தொழில்களைக் கொடுத்து ஏன் நடத்தச் சொல்லக்கூடாது? கடைசி கணக்கெடுப்பில் அவர்கள் நடத்தியபோது இலாபம் இல்லாமல் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் மக்கள் மன்றத்தில் கொண்டுவந்து தண்டிக்கச் செய்யலாமே? அம்மாதிரி நேரு சர்க்கார் செய்யாமல் ஏழைத் தொழிலாளரையே கஷ்டப்படுத்துகிறது. கள்ள மார்க்கெட்காரர்களுக்கு கழுமரமங்கே?

அபேதவாதம் படித்த அலகாபாத் நேரு இந்தியாவிலுள்ள அத்தனை பாட்டாளி விவசாயிகளின் நம்பிக்கையை இழந்துவிட்டார். நம்பிக்கை இழந்ததால் இந்திய உபகண்டத்தை விமானத்தால் சுற்றி வருகிறார். உள்ளத்திலே சமதர்மம், முதலாளிகளிடம் நடுக்கம், நிர்வாகத்திலே திறமையின்மை இவற்றையுடைய நேருவிடம் திரும்பவும் ஆட்சியை ஒப்படைப்பது, வீட்டிலுள்ள ஆட்டைப் பிடித்து; ஓநாயிடம் கொடுப்பது போலாகும்.



காங்கிரஸை இனி ஆட்சிக்குக் கொண்டு வராதிருக்க எல்லாவிதமான வழிகளில், சட்ட பூர்வமான, நாகரிகமான முயற்சிகளையும் நீங்கள் செய்ய வேண்டும்!"

சரியும் செல்வாக்கை சரிக்கட்ட வெளிநாடு சென்று புகழடைந்து வருவது போல வருகிறார் நேரு ஆனால் வெளி நாடுகளிலாவது சர்க்காருக்கு செல்வாக்குண்டா?

அமெரிக்காவின் பின்னால் தான் அங்கும் நேரு செல்கிறார். கொரியாவில் 38-ம் அட்சரேகையைத் தாண்டினால் கண்டிப்பேன் என்று மிரட்டிய நேரு மாக் ஆர்தார் அதைத் தாண்டியதும் என்ன செய்தார்?

எகிப்து, ஈரான் போராட்டங்களுக்கு ஆதரவாக ஒரு நல்ல வார்த்தையாவது சொன்னாரா? சொல்வாரா? சாவதற்கு முன்னியாகத் முஷ்டியைக் காட்டி விட்டுச் சென்றார். அவர் சொன்னார். எந்த ஒரு நாடு பிச்சைத் தட்டேந்தி வெளிநாடு செல்கிறதோ அப்போது அதற்கு அங்கே செல்வாக்கு இருக்கமுடியாது என்று.

திராவிட நாட்டுக்குக்கையெழுத்துப்போடும் வரை எதிர்த்துக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் மக்களிடமிருந்து, ஏற்பட்டுத்தான் தீரவேண்டும் என்ற எழுச்சி ஏற்பட்டுவிட்டால் எல்லோரும், கம்யூனிஸ்டுகள் உள்பட ஒத்துக்கொள்வார்கள். பாகிஸ்தான் அமைவதை கம்யூனிஸ்ட்கள்கூட முதலில் எதிர்த்தனர், ஆனால் பின்னர் சுயநிர்ணயத்தை ஆதரிக்கிறோம்' என்று சொல்லிவிட்டனர்.

பக்தூனிஸ்தான், பர்மிய கரேன்ஸ்தான் ஏற்பட இங்கே ஆதரவு காட்டுகிறார்கள். பாலஸ்தீனம் போர்ச்சுக்கல், அயர்லாந்து ஸ்விட்சர்லாந்து போன்ற சிறு நாடுகள் நன்கு வாழ்கின்றன. பிரிந்து சென்ற அவை செத்துவிடவில்லை. பாரிஸும் லண்டனும் சென்று வந்த நேரு ஐரோப்பா ஐரோப்பியருக்கே என்று ஏன் அங்கு 'சொல்லவில்லை? சொல்லத்தான் முடியுமா என்று கேட்கிறேன்.

எனதருமைத் தோழர்களே—யான் அதிகம் பேச முடியவில்லை. இங்கு கண்ட எழுச்சி என்னைத் திணறவைக்கிறது. என் மனதிலே பட்டவைகளைக் கூறிவிட்டேன். மட்டற்ற மகிழ்ச்சி ஒருபுறம்—அதே சமயத்தில் இயக்கம் வளர்ந்துள்ள நிலை—பொறுப்பு மற்றொருபுறம் ஆகிய இரு சக்திகளையும் கண்டு உணர்ச்சியால் என்னால் பேச முடியவில்லை.


அருமைக் கண்மணிகளே, தம்பிமார்களே உங்களது கண்ணீர்—அன்று நாம் சிந்திய கண்ணீர்த் துளிகள் வீணாகவில்லை — இன்று வெற்றிப் பாதையிலே செல்கிறோம். மேலும் உங்களது தூய்மையான உழைப்பால் சக்தியால் லட்சியத்தால் வெற்றியடைவோம் என்ற உறுதி எனக்குண்டு. அந்த உறுதியுடன் பணியாற்றுமாறு உங்கள் அனைவரையும்—திராவிட சமுதாயத்தையே அழைக்கிறேன் என்று கம்மும் குரலில் பேசியதோடு தனது முன்னுரையை முடித்தார்.

## முன் கதை...

திருடர்களைகளைப் பிடிக்க, போலீஸ் ஆண்டியும் பாண்டியும் தூக்கமில்லாமல் இரவு பகலாகச் சுற்றுகிருர்கள்.

ஆனல் ஓர் நாள் காலையில் குப்பைத் தொட்டிக்கு பின்புறம் நின்ற கழுதையின் கழுத்தைப் பிடித்துக்கொண்டான், போலீஸ் ஆண்டி!

கழுதை என்பதை அறிந்ததும் போலீஸ் ஆண்டி வெட்கப்பட்டான்......




கதை: **பூவை. ராமசாமி**

வசனம்: **மா. தங்கவேலர்**

*

### காட்சி 44

இடம்: தனபாலன் வீடு.

நேரம்; 1-மணி.

இருப்போர்: திருடர் கூட்டம், தலைவன் தனபாலன், கிழவி.

நிலைமை: (குடித்த திருடர்கள் கும்மாளமிட்டுக் கொண்டிருக்கின்றனர் ஒரு மூலையிலே. அந்தத் திருட்டுக் கூட்டத்தின் கடைந்கெடுத்த பித்தலாட்டக்காரனை தலைவன் தனபாலன் தனது அறையிலிருந்து வெளியே வந்து எட்டிப் பார்க்கிருன்.)

முதலாவது குடிகாரன்: டேய்! என்னடா கவிஞன் என்ன சொல்ருன்.

அடுத்தவன்: ஏதோ சிந்திச்சுக்கிட்டிருக்காரு யாரும் அவரைத் தொந்தரவு பண்ணுதிகண்ணே.

மு. கு; ஏதோ பதில் சொல்ல முடியாமல் நமக்கெல்லாம், அழக ஆரம்பிச்சுக்காருனுல்ல நினைச்சேன். சிந்திக்கிற மூஞ்சி லட்சணமா இது.

குடிகரான்: நானு பதில் சொல்ல முடியாமல் திணறுகிறேன். இப்பப்பாரு நூறு கேள்வியைக் கேட்டு ஒங்களையெல்லாம் அசர வைக்கிறேன் பாரு.

மூ. கு: நூறு கேள்வியா?

அடுத்தவன்: ஊரார் கேட்குற கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல இவனுக்கு சொல்லிக் கொடுத்தவங்க நாமதானேண்ணே. இப்பப்போயி இவன் நமக்குக் கேள்வி போடுகிருனமே,

மு. கு: தம்பி! உனக்கு விஷயம் புரியலையா இன்னும். ஊரார் இவனைப் பார்த்து கேட்ட கேள்வியைத்தான் நம்மைப்பார்த்து கேட்கப் போகிருன். அவனது அறிவுக்கு எட்டினது போக, மீதியை நம்மிடமிருந்து தெரிந்து கொள்ளப்பார்க்கிருன். தம்பி! நூறு கேள்வியென்ன இதுவரை லட்சக் கணக்கான கேள்விகளுக்கு பதில் சொல்லலையா நாம, பட்டியலைப் பாரு — சொன்னு நேரம் போதாதே. நூறு கேள்வி கேட்குற அளவுக்குத்தான் அவனுக்கு புத்தியிருக்குது. நாம சொல்லிவந்த பதிலுக்கும், இனி ஊராருக்கு சொல்லப் போற பதிலுக்கும் காலத்தை நினைத்துப்பார்த்தாலே கணக்கிலடங்காதே.

அடுத்தவன்: ஏண்ணே! இவனை விட பெரிய கவிஞனெல்லாம் நம்மகிட்டே முன்னே இருந்தாங்களே, நம்மை மறந்ததும் அதுக இருக்கிற மூலையே தெரியலையே, இவன் எந்தமட்டு? நாம—பதில் சொல்றது இருக்கட்டும். இவன் அன்று பேசிய பேச்சுக்கும், எழுதிய எழுத்துக்கும், அடித்த கூத்துக்கும் இன்று நடந்துவரும் முறைக்கும் ஊராருக்கு பதில் சொல்லவே ஆயுசும், திறமையும் போதாதே இவனுக்கு.

(தனபாலன் கோபத்தோடு முன்னே வந்து...)

தன: டேய்! கழுதைக் கவிஞா! மூடடா உன் வாயை, கண்டதைச் சொல்லி என் மானத்தை வாங்கிவிடுவாய் போலிருக்கிறதே. உன்னையும் ஒரு ஆளாக நம்பி என் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டேனே. நான் ஒரு முட்டாள்,

குடிகாரன்: தலைவர் தனது திறமையை ஒப்புக் கொண்டுவிட்டாரே! வாழ்க தலைவர். ஏண்டா கோஷம் போடமாட்டேங்கிறீக. ஏன் இப்படி திடீர்னு 'ஸ்ட்ரைக்' பண்ணிட்டிக. நாமதான் துரோகம் பண்ற பாம்பரைனு இவனுக நம்மளையும் துரோகம் பண்ணிடுவானுக போலிருக்கே. சம்பத்து சகாயா நீ ஆபத்து சகாயனு இருக்கமாட்டே போலிருக்கே!

தன: டேய், மண்டு! மூலையிலே போய் படுடா. விடிஞ்சா எல்லாம் சரியாப்போயிடும்.

குடி; குடிகாரன் பேச்சு விடிஞ்சாப் போச்சுன்னு சொல்றீகளோ —சரி போறேன். நல்ல 'மு' தலைவர் சொல்றப்ப கேட்காமே யிருக்க முடியுமா என்ன. (மெதுவாக) தலைவனும் தலைவன்! இவனையெல்லாம் போயித் தூக்கி வச்சா இப்படிப் பேசாமலிருப்பானு என்ன. இந்த சோம்பேறிக் குண்டு என்னைப் போயி மண்டுங்குது. இரு, இரு இவன் எத்தனை நாளைக்கு, ஆனனப்பட்டவங்களையெல்லாம் கடித்து எறியும்போது இவனை மட்டும் நிலைத்துப்போற்றி விடப்போகிறேனு என்ன. சமயம் வரட்டும் ஒரு கை பார்த்துக் கொள்ளுகிறேன்.

(தலைவனின் முரட்டுக் குரலுக்குப் பணிந்து எல்லோரும் தூங்கச் செல்லுகின்றனர், தலையாட்டத்தோடு. அப்போது காலிப்பானையும், கூடையும் தூக்கிக்கொண்டு முன்னே வந்து நிற்கிருள் கிழவி.)

தன: ஏய்! என்ன வேண்டும்?

கிழவி: பணம் வேண்டும் மகாராசா!

தன: பணமா?

கிழவி: பணம் கொடுத்து ஒரு வாரம் ஆகுதே ராசா. இன்னிக்குப்போயி பணத்தை எண்ணிக் கொடுக்கலேனு நாளையிலேயிருந்து கள்ளுத் தரமாட்டானுக. இன்னிக்கு எப்படியாவது வாங்கி வர்றேன்னு சொல்லி வந்திருக்கிறேன். ஏதாவது கொடுத்தனுப்பப்பா.

தன: கிழட்டு முண்டம், சொன்னுப் புரியல்லே, போ, வெளியே. எல்லாம் சேர்த்து மொத்தமாய் வாங்கிக்கலாம். சீக்கிரம் போய்ச் சேரு.

கிழவி: சாமி, சாமி! ஏதாவது கொடுத்தாத்தான் அவனுக உயிரோடு விடுவானுக. இந்தத்தள்ளாத வயசிலே எனக்கேன் இவ்வளவு சிரமம், நாலு காசு சம்பாதிக்கத்தானே. அதையும் நீங்க தரமாட்டேன்னு பிடிவாதம் செய்தா எப்படி ஆகுறது.

தன: எருமைக்கெழவி! இதோ பாரு...இன்றைக்கு கண்டிப்பாக பணம் தரமாட்டேன். நாளைக்கு வராமலிருந்தாலோ தொலைத்து விடுவேன், தெரிஞ்சுக்க.

கிழ: நாளைக்கு நமக்கு 'சரக்கு, வரணும்னு இன்னிக்கு அவங்களுக்கு பணம் போயிச் சேரனுங்களே.

தன: அதெல்லாம் எனக்குத் தெரியாது. நாளைக்கு நீ காலங்கடத்தாமல் முன்னுடியே வந்து சேரனும் இங்கே.

கிழ: சாமி......

தன: கதை பேசாதே இங்கே! டேய் யாரது.........கழுத்தைப் பிடித்து இந்த கிழக் கழுதையை வெளியே தள்ளு.

(ஒருவன் ஓடிவருகிருன். அதற்குள் கூடையைக் தூக்கிக்கொண்டு வெளியேறிவிடுகிருள் கிழவி.)

### காட்சி 45

இடம்: தெருவழி

நேரம்: 1—2 மணி

இருப்போர்: போலீசார் நால்வர், கிழவி.

நிலைமை: (தனபாலனல் ஏமாற்றப்பட்ட கிழவி அழுதுகொண்டும் வசைபாடிக் கொண்டும் வருகிருள் பாதையிலே. அவளுக்கு நேர் எதிரே போலீசார் நால்வரும் வருகின்றனர். கூடையோடு வரும் கிழவியைக் கண்டதும் அவளை நெருங்கிச் செல்கின்றனர் நால்வரும்.)

பாண்டி: அடடே! நம்ம பாளையூர் சந்தைக் கிழவி.

ஆண்டி: ஆமா! அதே விளக்கெண்ணைக் கிழவிதான் ஏம்மா சந்தைக்கு அதுக்குள்ளவா போய்த் திரும்பிட்டே.

(ஆண்டி பேசிக்கொண்டிருக்கும் போதே, போலிஸ் பொன்னன் கூடையைக் கைபிடித்து கீழே இறக்குகிருன். கூடையினுள்ளே காலியாக்கப்பட்ட மதுப்பானையிலிருந்து நெடி கிளம்புகிறது. திடுக்கிட்டுப் போன பொன்னன்......)

பொன்: ஏய், என்னம்மா இது? (கிழவி பேசமுடியாமல் அழுது திணறுகிருள்.)

ஆண்டி: பாண்டியண்ணே! அப்பவே சொன்னேன் கேட்டிகளா! 'சம்திங்' இருக்கும்னு சொன்னேனே. கேட்டிகளா நீ வேப்பண்ணையிலும், வெளக்கெண்ணையிலும் கையை வைக்கிறதான்னு சொன்னீக. இப்ப நடந்திருக்கிறதைப் பார்த்தீகளா.

பாண்டி; ஆமாண்ணே! நிலைமை எவ்வளவோ சீரியசாகவல்ல போயிருக்கு. இந்தக் கழுதையை அப்பவே ஒரு அடி எடுத்து வைத்திருக்க விடக்கூடாதுண்ணே.

பொன்; வீரப்புலிகளே! கொஞ்சம் ஒங்க பிரதாபத்தை நிறுத்துங்களா! (கிழவியின் பக்கம் திரும்பி) என்ன பதில் பேசாமயிருக்கே. நாங்க யாருண்ணு தெரியுதுல்ல. இனியும் நீ தப்பிச்சுக்கலாம்ற எண்ணத்தை மறந்துட்டு உள்ளதை ஒழுங்காச் சொல்லிடு. இல்லே...வீணு நீ அவஸ்தைப்படனும்.

கிழவி: சாமி......சாமி

(அழுகிருள் கோவென்றுகதறி)

பொன்: சும்மா சொல்லு! நடந்ததைச் சொல்லிட்டா ஒண்ணும் பயமில்லே......ஹூம்... சொல்லு.

கிழ: சாமி ஊர்க் கோடியிலே, திருடர் கூட்டம் ஒண்ணு தங்கியிருக்கு. அதுக்குத் தலைவன் தனபாலன்.

பொன்: தனபாலனு?

கிழ: நம்ம நாட்டாமைக்காரரு இல்லேங்க அவரு தம்பிதானுங்க.

பொன்: அந்த தனபாலனு!...... அவன் ரொம்ப நல்லவனுச்சே. பெரிய மனுசனுச்சே ஊரிலேயே.

ஆண்: பெரிய மனுசன்தானே இதுமாதிரி சின்னக் காரியத்தையெல்லாம் செய்வான்.

கிழ: பெரிய மனுசனுவது ஒன்னுவது. எல்லாம் பகல் வேசம். ராவுலே அவன் பண்ற அட்டகாசமிருக்கே அப்பப்ப சகிக்கலை. அவனுக்காகத்தான் இந்தக் கள்ளுப் பானையைக் கொண்டு போனேன்.

பாண்: இந்தக் கிழவிக்கு எவ்வளவு தைரியம் பார்த்தியாயா யண்ணே!

கிழ: வயிறு ஒண்ணு இருக்குதே சாமி. எதைச் செய்தாவது எப்படியாவது காசு சம்பாதிக்கணும்ற நினைப்பிலே......

பொன்: சரி: தனபாலன் இப்போது எங்கே இருக்கிருன்.

கிழவி: அந்த மண்டபத்திலே தானிருக்கிருன். திருட்டுக் கூட்டத்தாரும் இப்போது அங்கே தான் இருக்கிருர்கள்.

பொன, எங்களோடு புறப்பட்டு வந்து, அவர்களிருக்குமிடத்தைக் காட்டவேண்டும், என்ன தெரிகிறதா?

கிழவி: ஆகட்டும் சாமி இதோ என் பின்னுடியே வாங்கள். (மெதுவாக) திருட்டுத் தனபாலா கேடு காலம் வந்திருச்சுடா ஒனக்கு. கள்ளுக்குடிச்ச கூலி தரமாட்டினியே இப்ப ஒன்னையே கல்லு ஒடைக்க இழுத்திட்டுப் போக வந்திருக்காக பாரு. சண்டாளன் என்னையும்

(3-ம் பக்கம் பார்க்க)

## தி. மு. கழக முதல் மாநில மாநாடு
### சென்னை 1951 டிசம்பர் 13, 14, 15, 16.

—(•)—

தலைவர் : **அறிஞர் அண்ணு**
திறப்பாளர் : கே. கே. நீலமேகம்
கண்காட்சித் திறப்பாளர் : சி. பி, சிற்றரசு
வரவேற்புக் குழுத் தலைவர் : என். வி. நடராசன்
செயலாளர்கள் : காஞ்சி. மணிமொழியார், நாஞ்சில் மனோகரன்
பொருளாளர் . திருச்சி சாம்பு
விளம்பரச் செயலாளர் : மு. கருணுநிதி
விளம்பர உறுப்பினர் : டி. எம். பார்த்தசாரதி
தொண்டர்படைத் தலைவர் : கே. எம். கண்ணபிரான்
தொண்டர்படைத் துணைத்தலைவர் : காஞ்சீபுரம் மார்க்

#### தீர்மானக்குழு

இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், திருச்சி. பராங்குசம், ஈ. வெ. கி. சம்பத், வி. எம். ஜான்.

#### பந்தல்-அலங்காரக்குழு

சி. வி. ராசன், ஏ. கே. சாமி, ஆர். டி. அரசு, கிருஷ்ணன்.

#### கண்காட்சிப் பகுதி

தில்லை-வில்லாளன், இரா. சவுரிராசன், கே. ஏ. மதியழகன்.

## தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு
### திருச்சி 1956 மே. 17, 18, 19, 20.

—(0)—

தலைவர் : நாவலர். நெடுஞ்செழியன்
திறப்பாளர் : ஜி. பி. சோமசுந்தரம்
கண்காட்சித் திறப்பாளர் : என். வி. நடராசன்
வரவேற்புக் குழுத் தலைவர் : அன்பில். தர்மலிங்கம்
செயலாளர்கள் : மதுரை எஸ். முத்து, திருச்சி எம். எஸ். மணி
பொருளாளர் : அறிஞர் அண்ணு
தொண்டர்படைத் தலைவர் : ஐ. எம். ஷரீப்

#### தீர்மானக்குழு

என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி, ஈ. வெ. கி. சம்பத்.

#### விளம்பரக்குழு

டி. பி. அழகுமுத்து, ஜி. பாராங்குசம், இராம. அரங்கண்ணல், எஸ். நெடுமாறன்.

#### கலைக்குழு

அறிஞர் அண்ணு, கலைஞர் கருணுநிதி, எம். ஜி. இராமச்சந்திரன், கே. ஆர். இராமசாமி.

#### பந்தல் குழு

எஸ். ஏ. ஜி. ராபி, டி. பி. மூர்த்தி, பண்ணை முத்துகிருட்டிணன், ஏ. நடராசன்.

# தி. மு. கழக மூன்ருவது பொது மாநாடு
## மதுரை - திருப்பரங்குன்றம். ஜுலை 13 முதல் 16 வரை

### தீர்மான ஆய்வுக் குழு

| | |
|---|---|
| இரா, நெடுஞ்செழியன், | தில்லை-வில்லாளன், |
| என். வி. நடராசன், | டி. கே. சீனிவாசன், |
| மு. கருணுநிதி எம்.எல்.ஏ., | கி. மனோகரன், |
| கே. ஏ. மதியழகன், | ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., |
| சி. பி. சிற்றரசு, | திராவிடமணி (கர்நாடகம்) |
| க. அன்பழகன் எம்.எல்.ஏ., | நரசிம்மன் (ஆந்திரம்) |
| இரா. தர்மலிங்கம் எம்.பி., | அருணுசலம் (கேரளம்) |

### கலைக் கண்காட்சிக் குழு

| | |
|---|---|
| இரா. செழியன், | உ. பில்லப்பன், |
| எம். எஸ். சிவசாமி, | டி. எம். பார்த்தசாரதி, |
| ப. நாராயணசாமி, | டி. கே. பொன்னுவேலு, |
| இளமுருகுபொற்செல்வி, | கே. ஆர். இராமசாமி, |
| எஸ். டி. சோமசுந்தரம், | எம். ஜி. இராமச்சந்திரன், |
| கே. இராசாராம், | எஸ். எஸ். இராசேந்திரன். |


திறப்பாளர்
கே, எ. மதியழகன்


கண்காட்சித் திறப்பாளர்
டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.


பொருளாளர்
கலைஞர் மு. கருணுநிதி எம்.எல்.ஏ.


வரவேற்புக்குழுத் தலைவர்
எஸ். முத்து

பதிவு எண்: 7178 திராவிடன் தொலைபேசி: 5945

# தி.மு.க.3-வது பொதுமாநாடு, மதுரை

## 1961 ஜூலைத் திங்கள் 13, 14, 15, 16 நாட்களில் திருப்பரங்குன்றம் பாண்டியன் நகர்.

### நிகழ்ச்சி நிரல்

### 13-7-61 வியாழன்

காலை 10 மணி: ஊர்வலம், மதுரை வண்டியூர் தெப்பக்குளத்திலிருந்து புறப்பட்டு, பிற்பகல் 1-மணிக்கு, திருப்பரங்குன்றம் பாண்டியன் நகரிலுள்ள மாநாட்டுப் பந்தலுக்குவந்து சேரும்.

பிற்பகல் 1-மணி :- கழகக் கொடி ஏற்றுவித்தல்
—மாநாட்டுத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்

இடைவேளை

மாலை 4-மணி : கலைக் கண்காட்சித் திறப்பு
—டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.எ.

,, 5-மணி : இசை விருந்து
—நாகூர் அனீபா, மற்றும் கழகப் பாடகர்கள்.

இரவு 10-மணி : நாடகம் (கலையரங்கில்)
''தென்பாண்டி வீரன்'' இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களும் அவர்தம் குழுவினரும் நடிப்பது.

குறிப்பு : மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டம் மாலை 6 மணிக்கு தனி இடத்தில் நடைபெறும்.

ஃ

### 14-7-61 வெள்ளி

காலை 9-மணி : இயக்கப் பாடல்கள் இசைத்தல்.

,, 9-30 மணி : வரவேற்புரை
—வரவேற்புக்குழுத் தலைவர் எஸ். முத்து எம்.சி.

,, 10-30 மணி : மாநாட்டுத் துவக்க உரை
—தோழர். கே. எ. மதியழகன்.

பகல் 12 மணி : மறைந்த மாவீரர்களுக்கு வீர வணக்கம்.
—தோழியர் அலமேலு அப்பாதுரை எம். சி.
—தோழர் சி. பி. சிற்றரசு.

பகல் 1-30 மணி இடைவேளை

பிற்பகல் 3-30 மணி : மாநாட்டுத் தலைவரை முன்மொழிதல் வழிமொழிதல்.

மாலை 6-30 மணி : மாநாட்டுத் தலைவர் முன்னுரை
—அறிஞர் அண்ணா அவர்கள்.

இரவு 10 மணி : நாடகம். ''மணி மகுடம்'' (கலையரங்கில்)
இலட்சிய நடிகரும் அவர்தம் குழுவினரும் நடிப்பது.

ஃ

### 15-7-61 சனி

காலை 9 மணி : இயக்கப்பாடல்கள் இசைத்தல்
9-30 மணி முதல் 1 மணி வரை. தீர்மானங்கள்.

பகல் 1-30 மணி இடை வேளை

பிற்பகல் 3-30 முதல் மாலை 6 மணிவரை. தீர்மானங்கள்

### சிறப்புச் சொற்பொழிவுகள்

மாலை 6 மணி முதல் :

தோழர் என். வி. நடராசன் (இலட்சியப்போராட்டங்கள்)
,, இரா. செழியன் (வடக்கும் தெற்கும்)
,, டி. கே. சீனுவாசன் (புதுவாழ்வு)
,, க. இராசாராம் (விடுதலை கண்ட சிறு நாடுகள்)
,, எம்.எஸ்.மணி (தொழிலாளரும்தொழிற்சங்கமும்)
,, இரெ. இளம்வழுதி (தொழில் வளமும், வாணிபமும்)
தோழியர். வேலு அம்மையார் (பழந்தமிழ் மகளிர்)
தோழர். காட்டூர். கோபால் (பஞ்சாலைத் தொழிலாளர்கள்)
,, எஸ். எஸ். இராசேந்திரன் (கலையும் வாழ்வும்)
,, இரா. நெடுஞ்செழியன் (மொழிவழியும் இனவழியும்)

இரவு 10 மணி : நாடகம் (கலையரங்கில்)
''தமிழ் வாழத் தலைகொடுத்தான்'' நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அவர்களும், அவர்தம் குழுவினரும் நடிப்பது.

ஃ

### 16-7-61 ஞாயிறு

காலை 9-மணி : இயக்கப்பாடல்கள் இசைத்தல்

,, 9-30 மணி :

தோழர். கி. மனோகரன் (அயர்லாந்து விடுதலை)
,, இரத்தினவேல்பாண்டியன் (உழவர் பிரச்சினை)
,, கே. எ. கிருட்டிணசாமி (விடுதலை அணியில் மாணவர்)
,, காஞ்சி கல்யாணசுந்தரம் (சமுதாய நலத் திட்டம்)
,, க. அறிவழகன் (திராவிடத்தின் வளங்கள்)
,, டி. எம். பார்த்தசாரதி (தொழிலாளர் இயக்க வரலாறு)
,, எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. (சட்ட மன்றமும் நாமும்)
,, எம். எஸ். சிவசாமி (திராவிடத்தின் துறைமுகங்கள்)
,, தில்லை-வில்லாளன் (சட்டமும் சமுதாயமும்)
,, டி. கே. பொன்னுவேலு (ஜனநாயகத்தில் மந்திரிகள்)
,, எம். எஸ். இராமசாமி (கைத்தறியினர் எதிர்காலம்)
,, தோழியர் பொற்செல்வி இளமுருகு (மகளிரும் சீர்திருத்தமும்)
,, எ. பி. ஜனார்த்தனம் (சமத்துவம்)
,, மசூத் (கேரளத்தில் தி. மு. க.)
,, எர்ரய்யா (ஆந்திரத்தில் நமது அணி)
,, எஸ். வி. பதி (கருநாடகத்தில் கழகப் பாசறை)
,, பி. ஆர். கோகுலகிருஷ்ணன் (இந்தி ஆதிக்கம்)
,, கே. ஆர். இராமசாமி (கலைத்துறையில் மறுமலர்ச்சி)
,, அ. பொன்னம்பலனார் (சமுதாய விடுதலை)
தோழியர். எஸ். பி. சற்குணம் (அரசியலும் மகளிரும்)
தோழர். க. அன்பழகன் எம்.எல்.ஏ. (உலக அரங்கில் நாம்)

பகல் 1-30 மணி இடை வேளை

பிற்பகல் 3 மணி :

தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ. (ஆட்சியாளரும் ஊழல்களும்)
,, வெ. கிருஷ்ணமூர்த்தி (இலங்கைத் தமிழர்கள்)
,, அ. பொ. அரசு (மாநகராட்சியில் நாம்)
,, இரா. தருமலிங்கம் எம். பி. (ஐந்தாண்டுத் திட்டங்களும் திராவிடமும்)
,, இராம. அரங்கண்ணல் (தாழ்த்தப்பட்டோர் நிலை)
மேயர். வி. முனுசாமி (நான் கண்ட வெளிநாடுகள்)
தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் (கலையின் மூலம் கழகப் பணி)
,, மு. கருணாநிதி எம். எல். ஏ. (விடுதலை வேட்கை)
அறிஞர் அண்ணா (மாநாட்டுத் தலைவர் முடிவுரை)
நன்றி கூறல் — வரவேற்புக் குழுவினர்

இரவு 10-30 மணி : நாடகம். (கலையரங்கில்)
''புதிய நாடகம்'' புரட்சி நடிகர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களும் அவர்தம் குழுவினரும்.

——(0)——

| | |
|---|---|
| பொருளாளர் | வரவேற்புக்குழுத் தலைவர் |
| மு. கருணாநிதி எம்.எல்.ஏ. | எஸ். முத்து எம். சி. |
| தொண்டர்படைத் தலைவர்கள் | செயலாளர்கள் |
| காதற்கனி, ப. சீனுவாசன் | அம்பில் தருமலிங்கம், ஆவுடையப்பன், பி. எஸ். மணியம் |

ஆசிரியர், வெளியிடுபவர் : என். வி. நடராசன், அச்சிடுபவர், சோமு அச்சகம், 168, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1